# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 10**
**OCTOBER 2020 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**


Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தர் எனக்கென்று கிருபையாக கொடுக்கப்பட்ட அன்பு வாசகர்களுக்கு,

2020 அக்டோபர் மாத ஜாமக்காரன் பத்திரிகை செய்தியை எழுத என்னை அனுமதித்த கர்த்தரை துதிக்கிறேன். உங்களுக்கு என் வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறேன்.

2020 ஆகஸ்ட் மாத ஜாமக்காரனில் உபவாச **ஜெபம் செய்வது எப்படி ?** என்பதை குறித்து எழுதினேன். **பழைய ஏற்பாட்டில்** உபவசத்தை பற்றி எழுதிய உபதேசங்களுக்கும் **புதிய ஏற்பாட்டில்** 40 நாள், 30 நாள், 21 நாள், 7 நாள் உபவாசத்தைப்பற்றி எதுவும் எழுதப்படவில்லை என்பதை குறிப்பிட்டேன். காரணம், இன்று TVயில் சில சேனல்களில் பேசும் ஊழியர்கள் உபவாசத்தைப்பற்றி தங்கள் தவறான உபதேசங்களை கூறி அதை கைக்கொண்டால் குழந்தை பிறக்கும். கடன் நீங்கும், வீடு கட்ட தடைகள் நீங்கும், ஊழியத்தில் அற்புதங்கள் நடக்கும் என்று மக்களை மிகவும் குழப்பி அவர்களை நம்ப வைக்க சில பொய்யான சாட்சிகளையும் கூறி மக்களை நம்ப வைக்கிறார்கள். ஆகவேதான் வேத வசனம், குறிப்பாக புதிய ஏற்பாட்டு சபைக்கு உபவாசத்தைப்பற்றி வசனம் கூறுவது என்ன என்பதை தெளிவாக எழுதினேன்.

ஏராளமான வாசகர்களும், ஊழியர்களும் அந்த உபவாச ஜெபத்தைப் பற்றிய கட்டுரை எங்கள் கண்களை திறந்தது. எப்படிப்பட்ட உபவாசம் சரியானது என்பதை தெளிவாக விளங்கிக்கொண்டோம். நாங்கள் கலந்துகொள்ளும் பல பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களின் பிரசங்கம் கேட்டு நாங்கள் அவர்கள் கூறியபடி உபவாசம் செய்து எங்களையே வருத்திக்கொண்டோம். வேதவசன அடிப்படையற்ற அப்படிப்பட்ட உபதேசங்களை கேட்டு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . **உபவாச ஜெபம் செய்வது எப்படி** ? என்ற அந்த செய்தியை மட்டும் ஒரு சின்ன புஸ்தக வடிவில் அச்சடித்து எங்களுக்கு அனுப்பினால் பலருக்கு நாங்கள் இலவசமாக வினியோகிக்க முடியுமே என்று கேட்டுக்கொண்டார்கள்.

அன்பானவர்களே ! அதை நான் கொரோனா வியாதி சுகமான நிலையில் என் படுக்கையில் **டெஸ்க் வைத்து** அதை எழுதினேன். 23 நவம்பர் 2020 அன்று **அக்டோபர்** மாத ஜாமக்காரனை எழுதி முடித்தேன். இன்னும் கொரோனா வியாதிக்காக ஆஸ்பத்திரியிலிருந்து வீடு வந்து சேர்ந்து இன்னும் நான்கு வாரங்கள் என் தனி அறையில் டாக்டர்களின் ஆலோசனைப்படி ஓய்வில் இருக்கிறேன். ஆகவே நான் அந்த கட்டுரையை அச்சடித்து உங்களுக்கு அனுப்பி வைப்பது கடினம். ஆகவே தேவையானவர்கள் என் ஜாமக்காரனில் வெளியிடும் எந்த கட்டரையையும் நீங்களே அச்சிட்டு வினியோகம் செய்து மற்றவர்கள் பயன்பட உதவுங்கள். நன்றி.

இழந்த பெலத்தை கர்த்தர் எனக்கு திரும்ப அளித்துவிட்டார். கடைசியாக டாக்டர்களின் ஸ்கேன் பரிசோதனையில் என்ன ஆலோசனை கூறுவார்களோ என்று காத்திருக்கிறேன்.

என் **தொலைபேசிகள்** இணைப்பு யாவையும் நீக்கி வைத்திருக்கிறார்கள். தொலை பேசியிலோ, **கைபேசியிலோ** (மொபைல்) நான் பேச அனுமதிக்கவில்லை. என் மகன் Dr. Sam அவர்களும் என் மனைவி வதனி அவர்களும்தான் 9894261333 மொபைலுக்கு வரும் SMS செய்தியை குறிப்பெழுதி அந்த நெம்பரில் அழைப்பவர்களுக்கு பதிலும் கூறி கொண்டிருக்கிறார்கள். சீக்கிரமே பூரண சுகம் பெற்று நான் என் **ஆபீஸில்** அமர கர்த்தர் அனுமதித்தால் நிச்சயம் உங்கள் யாவரோடும் பேச வாஞ்சையாயிருக்கிறேன்.

என் **வைத்திய செலவுக்கு** பணம் அனுப்பிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். ஜாமக்காரன் பத்திரிகை ஊழியம் தடைபடாமல் தொடர்ந்து நடத்த மாதம் தவறாமல் காணிக்கைகளால் (Online, M.O., Cheque, D.D. மூலமாக) தாங்கியும் ஜெபித்தும் வருகிற யாவருக்கும் நன்றி கூறுகிறேன். **இனி எனக்கு வைத்திய செலவுக்கு பணம் தேவைப்படாது** என்று நினைக்கிறேன் கர்த்தருக்கே மகிமை.

2020 **செப்டம்பர்** மாத ஜாமக்காரனில் நான் எழுதிய **கனமான ஊழியம்** என்ற தலைப்பில் எழுதிய செய்தியைப்பற்றியும் **பெற்ற பிள்ளைகளின் சாட்சியற்ற** வாழ்க்கையின் காரணமாக பிஷப்மார்கள் தங்கள் சாட்சியை இழந்து பல **பண சிக்கலில்** அகப்பட்டார்கள். அந்த விவரங்களை நான் பலர் மூலமாய் கேள்விப்பட்டு **சாட்சியை** இழந்த சில பிஷப்மார்களைப்பற்றி எழுதினேன். நான் எழுதிய கட்டுரைகளை வாசித்த பலர் பலவிதமான **விமர்சனங்களை** எனக்கு எழுதியும் தொலைபேசியிலும் e-mail யிலும் பகிர்ந்து கொண்டார்கள். சிலர் நீங்கள் கொஞ்சம் **நிதானமாக** எழுதுவது நல்லது. சில இடத்தில் **கடுமையான வார்த்தைகளை** உபயோகித்துள்ளீர்கள்.

அப்படி எழுதுவதை நீங்கள் தவிர்த்துவிடுவது நல்லது. முதிர்ந்த ஊழியரான உங்களுக்கு நாங்கள் ஆலோசனை கொடுக்க தயங்கினோம், சபையைப்பற்றியும், சாட்சியுள்ள வாழ்கை பற்றியும், சபை தலைவர்கள், மூப்பர்கள் தகுதி பற்றியும் கடந்த 45 வருடங்களாக ஒவ்வொரு பிரசங்கத்திலும் அவைகளை குறித்து மிகவும் நீங்கள் பாரத்தோடும், தைரியத்தோடும் பிரசங்கித்தீர்கள் உங்கள் பத்திரிகையிலும் தொடர்ந்து அந்த சாட்சி வாழ்க்கையை வலியுறுத்தி வந்தீர்கள்.

எங்களுக்கும் எங்களை சுற்றி எங்கள் சபைகள் மட்டுமல்ல, மற்ற சபைகளில் நடக்கும் அநியாயங்களை குறித்து கோபமும் எரிச்சலும் வருகிறது. என்ன செய்ய ? இனி ஒன்றும் செய்ய முடியாது. வாழையடி வாழையாக தொடரும் ஊழலும் சாட்சியில்லா வாழ்க்கையில் ஊறிப்போனவர்கள் தங்களை தாங்களே கடினப்படுத்திக்கெண்டார்கள். **அப்படிப்பட்ட சபை தலைவர்களுக்கும்,** ஊழல் செய்பவர்களுக்கு மட்டுமே **உங்கள்மேல் கோபம் வருமே ஒழிய** எங்களைப் போன்றவர்களுக்கல்ல. ஆனால் பல ஆண்டுகளாக உங்கள் ஜாமக்காரனை இரண்டு, மூன்று தலைமுறையாக வாசித்து வரும் எங்களுக்கு 2020 **செப்டம்பர்** மாத ஜாமக்காரன் கொஞ்ஜம் சலிப்பையும் சோர்வையும் உண்டாக்கியது. ஆனாலும் அந்தந்த சபை மக்கள் நான் அறியாத பல சம்பவங்களை அவர்கள் அறிந்து ஆச்சரியப்பட்டு அந்த குறிப்பிட்ட சில சபை தலைவர்களைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் அந்தந்த சபை மக்களே மேலும் **பல புதிய தகவல்களை** கூறி நான் எழுதியதை அவர்களே உறுதிப்படுத்தினார்கள். அவைகளைப்பற்றியும் நாங்கள் கேட்டு அறிந்தோம். மனம் மிகவும் வேதனைப்பட்டது.

ஆயர் எனக்கு எழுதிய கடிதத்தில் ஓய்வுபெற்ற **ஆயரான** எனக்கும் என் கூடஉள்ள பல ஆயர்களுக்கும் அவர்களைப்பற்றிய உண்மை தெரியும். நாங்கள் ஊழியத்தில் இருக்கும்போது பிஷப்மார்களையோ. லே செயலர்களையோ கேள்வி கேட்க முடியாது. அப்படி நான் கேள்விப்பட்டதையும் சந்தேகப்பட்டதையும் சக ஆயர்களோடு பகிர்ந்து கொண்டால் போதும் அந்த ஆயர்கள் யாவரும் **என்னை ஒதுக்கிவிடுவார்கள்.** அதன்பிறகு நானும் **என் மனைவியும்** என் பிள்ளைகளும் பட்டபாடு கொஞ்ஜமல்ல. நல்ல வேளை **புது பிஷப்** வந்தவுடன்தான் என் நிலைமை மாறியது. **என் மனைவிக்கும்** பழைய இடத்துக்கே **மாற்றல் கிடைத்தது.** நாங்கள் சமாதானத்துடன் **ஓய்வு பெற்று** சபை அரசியலில் சம்பந்தப்படாமல் டையோசிஸ்ஸின் எந்த குரூப்பையும் சாராமல் ஜீவித்துக்கொண்டு இருக்கிறோம். உங்களுக்காக நாங்கள் குடும்பமாக ஜெபிக்கிறோம்.

மேலே வாசித்ததைபோல் பலர் தங்கள் அபிப்ராயங்களை ஆலோசனையாக எழுதினார்கள். என் எழுத்தால் யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் அதற்காக நான் வருத்தம் தெரிவிக்கிறேன்.

கர்த்தர் தாமே உங்கள் யாவருக்கும் சமாதானத்தையும் ஆறுதலையும் அளிப்பாராக. கடந்த 9 மாதங்களாக நாம் யாரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடயாமல் நம்மை பிரித்துவிட்டது இந்த கொரோனா ! இனி நாம் சந்திப்பது எப்போது என்பது கர்த்தருக்குத்தான் தெரியும் ஜெபிப்போம் ! ஜெபிக்கிறேன்.

டாக்டர் **புஷ்பராஜ்**

# கேள்வி? பதில்!

**கேள்வி :** இவ்வளவு ஆழமான அனுபவம் உள்ள நீங்கள் **உங்கள் மரணத்தைப்பற்றி** நம்பிக்கையற்ற நிலையில், **என் அத்தியாயம் முடியப்போகிறது** என்ற வார்த்தையை எப்படி எழுதலாம் ? அதை வாசித்த எங்கள் உள்ளமெல்லாம் துடித்துவிட்டது.

**பதில் :** உங்கள் அன்புக்கு நன்றி, என் வாழ்கையில் ஊழியத்தில் ஆழமாக கால் வைத்தவுடன் நான் பலமுறை **மரண இருளின் பள்ளதாக்கின் வழியே** என் ஆண்டவர் என்னை நடத்திச்சென்றார். அந்த பாதையில் **பலமுறை மரணத்திலிருந்து** என்னை கர்த்தர் கிருபையாய் பாதுகாத்து **உயிரோடு வைத்தார்.** அதில் எனக்கு ஞாபகத்தில் வந்தவற்றிலிருந்து சில சமபவங்களை ஆண்டவர் நாம மகிமைக்கென்று சம்பவங்களை மிகவும் சுருக்கி அறிவிக்கிறேன்.

## I) விமான விபத்து

வருடம் ஞாபகத்தில இல்லை. திருவனந்தபுரத்திலிருந்து – கோயமுத்தூருக்கு விமானத்தில் வந்தேன். அன்று மாலையே கோயமுத்தூரில் கூட்டத்தில் பேசவேண்டும். விமானம் புறப்பட்டது, கொச்சியில் சில பயனிகளை இறக்கி சில பயணிகளை ஏற்றிக்கொண்டு அந்த விமானம் கோயமுத்தூர் புறப்பட்டது. 40 நிமிடத்தில் விமானம் கொச்சியிலிருந்து கோயமுத்தூர் வந்துவிட்டது. ஆனால் இறங்கும் சமயம் **விமானத்தின் சக்கரங்கள்** கீழே இறங்கவில்லை. விமான நிலையத்தையும் கோயமுத்தூரையும் சுமார் மூன்று முறை வானத்தில் வட்டமடித்துக்கொண்டே விமானி பலமுறை சக்கரம் இயக்கும் கருவியை இயக்கி பார்த்தார். அதே வேளையில் விமானம் தரையில் மோதினால் தீ பற்றிவிடக்கூடாது என்பதால் விமானத்தில் உள்ள பெற்ரோல் முழுவதையும் வானத்தில் திறந்து விட்டு கொட்டி கொண்டிருந்தார்.

கோயமுத்தூர் விமானம் ஓடுதளம் முன்பும் பின்பும் சோள கதிர் பயிர் செய்திருந்த வயலில் விமானததை உராயவிட்டு வேகத்தை குறைத்து **ஓடுதளத்தில்** சக்கரம் இல்லாமலே விமானத்தை தலையில் உராயவிட்டு இறக்க தீர்மானித்தார். நான்காவது முறையாக சக்கரத்தை இறக்க முயற்சிசெய்த போது டங் என்ற சத்தத்தோடு சக்கரம் இறங்கிவிட்டது. நிச்சயம் விமானம்

ஓடுதளத்தில் உராய போகிறது. எந்த விதத்திலாவது விமானம் நசுங்கி சேதமடையவோ கொஞ்சம் மீதி இருந்த பெற்றோலால் தீ பிடித்தாலும் பிடிக்கலாம் எல்லாவற்றிற்கும் ஆயத்தத்தோடு இருக்க கேட்டுக்கொள்ளப்பட்டோம்.

நான் சீட்டில் அமர்ந்தபடியே முன்னங்கால்களால் எனக்கு முன் உள்ள சீட்டில் இருக்கையை உதைத்தபடி ஜெபித்துக்கொண்டிருந்தேன். அதற்குள் விமானத்தில் இருந்தவர்கள் ராமா, கிருஷ்ணா, முருகா என்றெல்லாம் சத்தமிட்டவாறு அழுதுகொண்டிருந்தார்கள். ஆனால் கர்த்தரின் பெரும் கிருபையால் எந்த ஆபத்தும் இன்றி பத்திரமாக விமான நிலையம் வந்தடைந்தேன்.

வானத்தில் இரண்டு முறை விமானம் வட்டமடித்தபடி இருந்தபோது கன்ட்ரோல் ரூமிலிருந்து கொச்சி விமான நிலையத்துக்கே **விமானத்தை திருப்பிக்கொண்டு செல்ல** கட்டளை வந்தது. காரணம் பழைய கால கொச்சி விமான நிலையம் கடலுக்கு மிக அருகே கட்டப்பட்டிருந்ததால் ஓரளவு சேதமில்லாமல் பயணிகளை தண்ணீரில் இறக்கிவிட அவசர ஏறபாடுகள் செய்யப்பட்டது. ஆனால் அதற்கும் வழியில்லை ஏறக்குறைய பெற்ரோல் முழுவதையும் சிந்த விட்டுவிட்டேன். திரும்ப கொச்சி செல்ல பெற்ரோல் போதாது என்று விமானி பேசியதை மிக அருகில் அமர்ந்திருந்த நாங்கள் கேட்டோம்.

## 2) ரயில் விபத்து

சென்னை புரசரவாக்கம் அருகே St. Pauls C.S.I. Church 4 நாட்கள் கண்வென்ஷன் முடித்து சேலம் திரும்ப **ஏற்காடு எக்ஸ்பிரஸ்** ரயிலில் டிக்கட் Book செய்திருந்தேன். முதல் கூட்டம் முடித்து அன்று இரவு மறுநாள் மாலை அவசரமாக ஜாமக்காரன் மலையாள மொழி பெயர்புக்காக திருவனந்தபுரம் செல்ல திடீர் தீர்மானம் செய்தேன். திருவனந்தபுரத்தில் C.S.I. சபை கன்வென்ஷன் நடக்கப்போகும் ஒரு நாள் முன்பாகவே திருவனந்தபுரம் போய் சேர்ந்துவிட தீர்மானித்து **சேரன் எக்ஸ்பிரஸ்ஸில்** டிக்கட் நானே புக் செய்தேன் **சேரன் எக்ஸ்பிரஸ்** லேட்டாக புறப்பட்டாலும் அது **ஏற்காடு எக்ஸ்பிரஸ்சை** விட 3 மணி நேரம் முன்னதாகவே **சேலம் வந்து சேர்ந்துவிடும்.** நான் வீட்டுக்கு சென்று திருவனந்தபுரம் பயணத்துக்கான ஏற்பாடுகளை முன்பதாகவே செய்யலாமே என்ற எண்ணத்துடன் **சேரன் எக்ஸ்பிரஸ்** ரயிலில் புக் செய்தேன்.

சம்பவித்தது என்னவென்றால் நான் ஏற்கனவே புக் செய்திருந்த **ஏற்காடு எக்ஸ்பிரஸ்** ரயில் பொம்மிடிக்கும் – டேனிஷ்பேட்டை ரயில் ஸ்டேஷனுக்கும் இடையே பெரும் காட்டு வளைவான பாதையில் ரயில் 3 பெட்டியை தவிற 16 Coachகளும் கவிழ்ந்து சில ஆயிரம் பேர்களுக்கு பெரும் காயம் ஏற்பட்டது. 72 பேர் மரணம் அடைந்திருந்தனர். ஏற்காடு எக்ஸ்பிரஸ்ஸில் புக் செய்த என் **டிக்கட்டை** நான் கேன்சல் செய்யாததால் **என் பெயர் சார்டில்** இருந்ததால் ரயில்வே துறையினர் காலை 8 மணிக்கு தொலைபேசியில் என் மனைவியிடம் உங்கள் கணவர் வந்த ரயில் பெரும் விபத்துக்குள்ளானது உடல் விவரம் அறியவில்லை என்று அறிவித்து போனை கட்செய்து

விட்டனர். கர்த்தர் என்னை முழு உடலோடு உயிர் காப்பாற்றி அதிகாலையே வீட்டுக்கு கொண்டு வந்து சேர்த்தார்.

இதை என்னவென்று சொல்வது – எதிர்பாராது உயிர் பிழைத்தேன் என்பதா? கர்த்தரின் ஏற்பாடு என்பதா? கர்த்தர் என்மேல் வைத்த கிருபை எத்தனை பெரியது. என் குடும்பத்தை அனாதை ஆக்காது என் திருவனந்தபுரம் கண்வென்ஷனும் தடைபடாது இருக்க ஏற்காடு எக்ஸ்பிரஸ்ஸிக்கு முன்பதாகவே சேலம் வந்து சேரும் **சேரன் எக்ஸ்பரஸ்ஸில்** டிக்கட் புக் செய்ய கர்த்தர் என் உள் உணர்வில் உணர்த்தி என்னை விபத்திலிருந்து காப்பாற்ற செய்தாரா?

## 3) பஸ் விபத்து

கேரளாவில் திருவனந்தபுரம் அருகே ST மங்காடு என்ற ஊரில் கண்வென்ஷன் முடித்து ஞாயிறு திருவனந்தபுரத்ததிலிருந்து கோயமுத்தூர் வழியாக சேலம் வந்து சேரும் No.1 என்ற ஆம்னி பஸ் கம்னெியின் A/c Coach உட்கார்ந்த நிலையில் படுத்து செல்லும் பஸ்ஸில் புக் செய்திருந்தேன். கூட்டம் முடித்து காரில் சபை பொருப்பாளர் ஆயர் யாவரும் என்னை திருவனந்தபுரம் வரை கொண்டுவந்து No.1 டிராவலஸ் என்ற பஸ்ஸில் ஏற்றி வைத்து சென்றுவிட்டனர். பஸ் புறப்பட்டது நான் உட்கர்ந்து இருப்பது 3வது ஜன்னல் ஓர சீட் ஆகும். முதல் இரண்டு சீட்டில் ஒரு தாயும் குழந்தையும் அவள் கணவரும் உட்கார்த்திருந்தனர். இரவு 2 மணியிருக்கும் எங்கள் பஸ் வேகமாய் போய்கொண்டிருந்தது. திடீர் என்று எங்கள் பஸ்சுக்கு முன் ஒரு லாரி போய்கொண்டிருந்தது. அதன் பின்பக்க டேஞ்ஜர் விளக்கு எரியவில்லை. ஆகவே பஸ்ஸை ஓட்டிச்சென்ற டிரைவருக்கு லாரி ஓடிக்கொண்டிருக்கவில்லை, அது ரிப்பேராகி நிற்கிறது என்று உடனே உணர்ந்து அவசர பிரேக் போட்டபோது எங்கள் வண்டி ரோட்டிலிருந்து இழுத்துகொண்டே போய் அந்த லாரியின் பின்பக்கம் டமார் என்று இடித்து நின்றது.

முன் சீட்டில் இருந்த பெண் குழந்தையோடு டிரைவர் உடகாரும் முன்பக்கம் போய் குழந்தையோடு விழுந்தார். நான் என் இரண்டு முட்டிகளையும் முன் சீட்டில் வைத்துகொண்டு தூங்கிக்கொண்டிருந்ததால் விழவில்லை, என் கையை முன் சீட்டை பிடித்தபடி காயம் ஏதும் இன்றி தம்பினேன். டிரைவர் வெளியே வர முடியாதபடி ஸ்டேரிங் மார்பையும் காலையும் அமுத்திக்கொண்டிருந்தது. உயிருக்கு ஆபத்தில்லை, நெஞ்ஜி அடிப்பட்டதால் மயங்கி கிடந்தார். நான் இருந்த வண்டியில் கதவு ஜன்னல் எதுவும் திறக்க முடியாமல் இருகிகொண்டது. அதற்குள் எங்கள் பிறகே வந்த எங்களைப்போல் கோயமுத்தூர் செல்லும் பஸ்ஸில் உள்ளவர்கள் ஓடிவந்து எங்களை இறக்க வழி தேடினர். கடைசியில் எங்கள் பஸ்ஸீன் பின் சீட்டின்மேல் உள்ள பின் கண்ணாடியை உடைத்து அவர்கள் வந்த பஸ்சை பின்பக்கமாக திருப்பி ஓட்டிவந்து அவர்கள் பஸ்ஸின் பின் பகுதியில் உள்ள ஏணியை எங்கள் வண்டிக்கருகே கொண்டு வந்து நிறுத்தி ஒவ்வொருவராக அந்த ஏணி வழியாக இறக்கி விட்டனர். நானும் இறங்கினேன். அந்த வழியாக வரும் வேறு பஸ்களில் கொஞ்ஜம் கொஞ்ஜம் பேராக ஏற்றி அந்த பஸ்ஸில் நின்றுகொண்டே நான்கு மணி நேரம் பயணம் செய்து கோயமுத்தூர் செல்லாம் என்றனர்.

நான் அதற்காக காத்திருக்காமல் 1½ கிலோ மீட்டர் தூரம் உள்ள ஒரு ஊரில் பஸ் ஸ்டாண்டு அருகே நின்று கொண்டிருந்த டேக்சி (கேப்) பிடித்து கோயமுத்தூருக்கு அதிகாலை 5½ மணிக்கு வந்துசேர்ந்து, 6¼ இன்டர் சிட்டி எக்ஸ்பிரஸ்ஸில் ஏறி காலை 9-00 மணிக்கு சேலம் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

எக்ஸ்பிரஸ் ஹைவே ரோட்டில் எத்தனையே பஸ் விபத்துக்களை பல முறை நான் போகும்போதும் வரும்போதும் பல பயணங்களில் கண்டிருக்கிறேன். பஸ்கள் அப்பளம் போல் நொருங்கி கிடப்பதையும் பலரின் உடல் வரிசையாக அடுக்கி வைத்திருப்பதையும் கண்டிருக்கிறேன்.

ஆனால் என்னையோ உடலில் ஒரு காயமும் இன்றி உயிரோடு காத்து வீடு கொண்டு வந்துசேர்த்த என் தேவாதி தேவனை இந்த சூழ்நிலையில் நினைக்காதிருப்பது எப்படி ? இவைகளை நான் எப்போதும் நினைப்பேன்! என் கர்த்தருக்கு துதி கனம் மகிமை செலுத்துகிறேன். என்னை குறித்து கர்த்தருக்கு பல திட்டங்கள் Mission உண்டு. அது முடியும் வரை நான் ஓடிக்கொண்டே இருப்பேன்.

## 4) 2000ம் ஆண்டு விமான விபத்து

ஜப்பான் ஊழிய பயணத்துக்காக Air India விமானத்தில் சென்னை விமான நிலையத்திலிருந்து புறப்பட்டேன். இரவு 11 மணிக்கு புறப்படவேண்டிய விமானம் விடியற்காலை 3½ மணிக்குத்தான் புறப்பட்டது. பயணிகள் கோபத்தோடு காரணம் கேட்டபோது இந்த விமானம் மிக்பெரிய விமானம் 400 பயணிகளை ஏற்றிச் செல்லும் விமானம். அந்த விமானத்தில் மொத்தம் நான்கு என்ஜின்களில் இரண்டு என்ஜினில் ஏதோ கோளாறு அதை ரிப்பேர் செய்துவிட்டோம் என்று பதில் கூறினார்கள்.

ஒரு வழியாக விமானம் புறப்பட்டது. விடியற்காலை சிங்கப்பூருக்கும் – சென்னைக்கும் இடையில் பறந்துக்கொண்டிருக்கும்போது (ஏர்லாக்) வானமண்டலத்தில் **காற்றில்லா வெற்றிடம்** சில இடங்களில் காணப்படும். இந்த இடைவெளியை கடக்க விமானத்தின் நான்கு என்ஜின்களையும் இயக்குவார்கள். அந்த சக்தியில் அந்த வெற்றிடத்தை விமானம் கடக்கும். விமானி எச்சரிப்பு கொடுத்தார். வெற்றிடம் காணப்படுகிறது என்றும் கூறி உறங்கிக்கொண்டிருக்கும் பயனிகளை **சீட்பெல்டை** அணிய கேட்டுக்கொண்டார்கள். அந்த சமயம் தான் அந்த மறக்க முடியாத சம்பவம் நடந்து. வான மண்டலத்தின் வெற்றிடத்தை கடக்கும்போது நான்கு என்ஜின்களில் **இரண்டு என்ஜின்கள்** மீண்டும் இயங்காமல் போனது. இந்த இரண்டு என்ஜின்களைத்தான் சென்னை விமான நிலையத்தில் ரிப்பேர் செய்துகொண்டிருந்தார்கள். அதே இரண்டு என்ஜின்கள்தான் மறுபடியும் பழுதுபட்டன. இது நம் இந்திய அரசாங்கத்துக்கு சொந்தமான Air India விமானத்தின் லட்சனம் ஆகும்.

இப்போது விமானம் பக்கவாட்டில் சரிந்தபடி பறக்க ஒருபக்கம் மேலே வைத்திருந்த பயணிகள் சமான்கள் பயணிகள் மேல் விழுந்தது. மறுபக்கம் விமானம் சாயும் போது அந்த

பக்கம் உள்ள சாமான்கள் விழுந்தன. இப்போது விமானம் ஓட்டும் பைலட் எல்லாரையும் **லைப் ஜாக்கட்** (Life Jacket) அணிய கேட்டுக்கெண்டார்கள். அப்போதே எங்களுக்கு விளங்கினது விமானம் கடலில் விழப்போகிறது, அதற்கான ஆயத்தம்தான் இது என்று வளங்கியது. லைப் ஜாக்கெட் என்பது கடலில் மிதப்பதற்காக அது உதவியாக இருக்கும். திடீர் என்று விமானம் கீழ்நோக்கி 90 டிகிரி செங்குத்தாக கடலை நோக்கி விமானம் பறக்க பலர் ஒருவர் பின் ஒருவராக உணவு கொண்டுவரும் **டிராலி வரும் இடைவெளியில்** விழுந்தார்கள். நானும் எகிரி விழுந்தேன். மறுபடியும் விமானம் சம நிலையில் பறந்தது. எல்லாரும் அவரவர் இடத்தில் உட்கார நான்கு காலில் நடப்பதுபோல நடந்து இடங்களை தேடினோம். என் சீட் 16ம் நெம்பர் ஜன்னல் அருகே உள்ளது. அந்த இடத்தில் சென்று பார்த்தால் ஆசனத்தின் நாக்கு இரும்பு Fபிரேம்தான் காணபப்ட்டது.

அதன்மேல் உள்ள குஷன் சீட் என் பின்னே ஒட்டியபடி பிய்த்து கொண்டு வந்தததை உணர்ந்தேன். அதற்குள் என் கழுத்து நிறைய இரத்தம் வழிந்ததை பக்கத்தில் அமர்ந்திருப்பவர் கூறினார். ஆனால் எனக்கு வலி ஏதும் தெரியவில்லை என்றாலும் அந்த இரத்தம் எங்கிருந்து வழிகிறது என்பதை கண்டுபடிக்க என் ஆசனத்தின் கீழ் உட்கார்ந்தபடி தலையனையை எடுத்து என் முகத்தில ஒத்தி எடுத்தேன். அப்போதுதான் என் வலது கண் புருவத்தில் ஒரு வெட்டு அதிலிருந்து இரத்தம் பீரிட்டு வழிந்தது. தலையனையை அழுத்தி பிடித்து தலையணையை அழுத்தியவாறு கண்களை மூடிக்கொண்டேன். அடுத்த சில நிமிடத்தில் மறுபடியும் விமானம் கடலுக்குள் செங்குத்தாக முழுகபோகிறது. யாரும் வெளியேறவே முடியாதபடி விமான கதவுகள் கடல் நீரின் அழுத்தத்தால் கதவை திறக்க முடியாத நிலை ஏற்படும். கடலில் மூழ்கிய கப்பலையும், கடலில் மூழ்கிய விமானத்தையும் யாரும் வெளியே எடுத்ததில்லை.

## என் ஆயத்தம்

ஒவ்வொரு முறை நான் வீட்டைவிட்டு புறப்படும் போதே அது ரயிலோ பஸ்ஸோ, விமானமோ எதுவானாலும் மரணத்தை சந்திக்கும் ஆயத்தத்தோடு ஜெபித்து வீட்டைவிட்டு வெயியேவருவேன். என் மனைவிடம் அலுவலக File கோப்புகள், வங்கி கணக்கு புஸ்தகங்களின் விவரம் யாவற்றையும் கூறி அவரையும் ஆயத்தப்படுத்தித்தான் வெளியே வருவேன். ஒருவேளை எனக்கு **மரணம் சம்பவித்தால்** என் சின்ன போட்டோ உடன் கேரளா, தமிழ்நாடு முக்கிய தினசரி செய்தி தாள்களில் என் மரண செய்தி அறிவிக்க அதற்கான பணம் சுமாராக எவ்வளவு ஆகுமோ அதையும் ஒரு கவரில் வைத்து என் மனைவியிடம் கொடுத்து வைத்துள்ளேன்.

இப்படி சகல ஆயத்தத்துடன் அன்று அந்த விமான பயணத்தின் போது நான் அமர்நதிருந்ததால் நான் **மரணத்துக்கு பயப்படாமல்** மரித்தால் நிச்சயம் கர்த்தரின் பாதம் போய் சேருவேன் என்ற பூரண நம்பிக்கை எனக்குள் இருந்ததால் கர்த்தவே என்னை காப்பாற்றும் என்று ஜெபிக்காமல் என் மனைவி பிள்ளைகளுக்காக ஜெபித்தேன். அதாவது சரீரம் கிடைக்காமல் எப்படி தாங்கிக் கொன்வார்கள். **என் முகத்தை** கடைசியாக பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கும் இருக்குமே! ஆனால் இம்முறை **என் உடல் என் வீட்டுக்கு போகாது, மரண**

**செய்திதான்** என் வீட்டுக்கு போகும். சரீரம் காணாத நிலையில் என் மனைவி என் இரண்டு பிள்ளைகள் அந்த சூழ்நிலையில் எப்படி தங்கள் சாட்சியை காத்துக்கொள்வார்கள். எப்படி அந்த துக்கத்தை தாங்கி கொள்வார்கள். ஆகவே கர்த்தாவே அவர்களை நீர்தான் பெலப்படுத்தவேண்டும் என்று மட்டும் ஜெபித்துவிட்டு இந்த சூழ்நிலையில் விமானத்தில் உள்ளவர்கள் உயிருள்ள தெய்வமாகிய உமக்கு அவர்கள் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டுமே என்று ஜெபிக்க தொடங்கினேன். அப்போது கடலுக்கும் விமானத்துக்கும் சுமார் 17 அடி தூரமே இருக்கும் நிலையில் விமானம் தலைகீழாக கடலை நோக்கி சென்றது, அந்த சூழ்நிலையில் இரண்டு விமான ஓட்டிகளில் ஒருவர் மயக்கமடைந்துவிட்டதால் ஒரே ஒரு பைலட் மட்டும் விமானத்தை மிகவும் சாமர்த்தியமாக வானத்தை நோக்கி உயரே தூக்கிவிட்டார். இப்போது விமானம் சமநிலையில் பறந்தது. உடனே விமான ஓட்டி (பைலட்) ஸ்பீக்கரில் கூறினார். யாரும் பயப்படவேண்டாம். விமானம் சென்னைக்கே திரும்பி போகிறது என்று அறிவித்தார். அப்போதுதான் எல்லாருக்கும் உயிர் திரும்ப வந்ததைபோல ஆயிற்று.

2001ம் வருடமே இந்த சம்பவத்தை ஜாமக்காரனில் சற்று விரிவாக எழுதிவிட்டேன். சென்னை விமான நிலையம் வந்து சேர்ந்து விட்டோம். விமான நிலையத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் விமானம் நிறுத்தப்பட்டது. எங்களை அழைத்துப்போக விமான நிலையத்தினர் பஸ் எதையும் ஏற்பாடு செய்யவில்லை. மொத்தம் 128 பேர் விபத்துக்கு உள்ளானார்கள. சிலர் பஞ்ஜாபிகள். ஒவ்வொருவரும் இரண்டு இரண்டு நபர்களை காயப்பட்டவர்களை இருகைகளில் கட்டிபிடித்து அவர்கள் கால்கள் தரையில் உராய தரதர என்று இழுத்து கொண்டு ஏர்போர்ட் நோக்கி சென்றனர். நானும் இரண்டு பேரை இழுத்துக்கொண்டு சென்றேன். விமான நிலையத்தில் நீலமான பெஞ்ச் இல்லாததால் எல்லாரையும் தரையில் படுக்க வைத்தோம். அதற்குள் TV நிலையத்தினர் பேட்டி எடுக்க விமான நிலையம் நோக்கி வருவதாக அறிந்தேன். உடனே விமான நிலைய அதிகாரியிடம் சென்று நான் ஒரு டாக்டர் அரசாங்க மருத்துவமனையில் என்னை சேர்க்கவேண்டாம். எனக்கு ஒரு டாக்சி ஏற்பாடு செய்துகொடுத்தால் அப்பல்லோ ஆஸ்பத்திரியில் நான் அட்மிட் ஆகிக்கொள்வேன் என்றேன்.

உடனே என் பாஸ்போர்டை வாங்கி சீல் வைத்து டாக்சியில் ஏற்றி அனுப்பினார்கள். அப்பல்லோ அவசர சிகிச்சை பிரிவில் என்னை படுக்கவைத்து கொண்டுபேனார்கள்.

அன்று இரவு டூட்டியில் இருந்த ஒரு வாலிப வயதுள்ள C.S.I சபையை சேர்ந்த டாக்டர் என் பெயரை கேட்டவுடன் என்னை ஸ்கேன் எடுத்த பின் காயத்துக்கு தையல் போடுகிறேன். தலை எலும்பு பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை முதலில் அறிய வேண்டும். அப்படியே சென்று திரும்ப வந்து தையல் போடப்பட்டு தலை எலும்பில் பாதிப்பு இல்லை. நாளைக்கே நீங்கள் வீட்டுக்கு பேகலாம் என்றார். அதற்குள் விமானத்தில் வந்த வேறு சில அரசியல்வாதிகள், பணக்காரர்கள் ஒருவர்பின் ஒருவராக அந்த ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தனர். TV **நிலையத்தினர்** அப்பல்லோ ஆஸ்பத்திரியிக்கு படையெடுக்க ஆரம்பித்தார்கள். விவரம் அறிந்த நான் என் முகத்தை TVகாரர்களுக்கு காட்ட விரும்பவில்லை. என் சொந்த விருப்பத்தில் டிஸ்சார்ஜ் கேட்கிறேன் என்று எழுதி தருகிறேன் என்றேன். உடனே டாக்டர் என் நிலை புரிந்துகொண்டு என்னை டிஸ்சார்ஜ் செய்தார். பணம் எவ்வளவு என்று கேட்டேன். அதற்கு டாக்டர் நீங்கள் ஒரு ஊழியர் என்பதை

அறிவேன். என் கணிக்கையாக அந்த பணத்தை நான் கட்ட தயவுசெய்து அனுமதி கொடுங்கள் என்றார். அவருக்காக ஜெபித்து எப்படியோ வீடுவந்து சேர்ந்தேன். கர்த்தருககே மகிமை உண்டாவதாக!

உங்கள் கேள்வி என்ன ? நான் **நம்பிக்கையற்ற நிலையில் என் அத்தியாயம் முடிய பேகிறது** என்று நான் எழுதியதை குறித்து **அது தவறு** என்பதாகவும் அது உங்கள் விசுவாசக் குறைவை காண்பிக்கிறது என்றும் எழுதினீர்கள்.

வேதத்தில் யாக்கோபு தன் கடிதத்தின் (நிரூபத்தின்) முடிவில் என்ன எழுதுகிறார் என்பதை கவணியுங்கள். ஒரு இடத்தைவிட்டு புறப்படும்போது அந்த இடத்தில் உள்ளவர்களிடம்

> **ஆண்டவருக்கு சித்தமானால் நாங்களும் உயிரோடு இருந்தால் இன்னின்னதை செய்வோம் என்று சொல்ல வேண்டும் என்கிறார்.** யாகச். 4:15.

இப்போது சொல்லுங்கள் நான் எழுதியது தவறா?

☐ மேலும் வேதம் கூறுவதை கவணியுங்கள். சங் 39:4-9, **கர்த்தாவே நான் எவ்வளவாய் நிலையற்றவன் என உணரும்படி என்** (வாழ்க்கையின்) **முடிவையும் என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்கு தெரிவியும்.**

இதோ (கர்த்தாவே) **நான் வாழும் நாட்களை நாலுவிரர்கடையளவாக்கினீர். என் அயுள் உம் பார்வைக்கு இல்லாதது போலிருக்கிறது.**

..... நீரே இதை (கொரோனா வியாதிக்குட்பட்டது) **செய்தீர் என்று நான் என் வாயை திறவாமல் மவுனமாயிருந்தேன்.**

புலம்பல் 3:33, 29 அவர் (கர்த்தர்) **மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கி சஞ்ஜலப்படுத்துகிறதில்லை.** வசனம் 28 **அவரே அதை தன் மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து மௌனமாயிருக்க கடவன்.**

நான் **கொரோனா வியாதியில்** ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது தேவன் **அனுமதித்ததாகும்.** யாரும் ஏன் என்று கேட்க முடியாது. பிர 9ல் ஞானி கூறுகிறான், **எல்லாருக்கும் ஒன்றுபோல் சம்பவிக்கும். பலியிட்டவனுக்கும் பலியிடாதவனுக்கும், நீதிமானுக்கும் – துன்மார்க்கனுக்கும் ஒன்றுபோல் சம்பவிக்கும் என்கிறான்.**

ஆகவே பெரிய ஊழியக்காரன், சாதாரண விசுவாசி என்றெல்லாம் பார்ப்பதில்லை, **கர்த்தர் அனுமதிக்காத எதுவும் எனக்கு எப்போதும் சம்பவிப்பதில்லை.** கர்த்தர் சகலத்தையும் அறிகிறார். ஜெபியுங்கள் – நானும் ஜெபிக்கிறேன்.

## எச்சரிக்கை

Whatsapp, Face Book, You-Tube போன்ற எதுவும் எனக்கு கிடையாது. என் பெயரில் யாராவது மேலே கூறியவற்றில் ஏதாவது எழுதினால் அதற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்பதை அறிவிக்கிறேன்.

# அந்தி கிறிஸ்துவின் பயங்கரமான திட்டம்

**அந்தி கிறிஸ்துவின் பயங்கரமான திட்டத்தையும், விசுவாசிகளை குழப்பக் கூடிய தவறான உபதேச திட்டத்தையும் இன்று அறிவிக்கிறேன். இதை நம்புகிறதும் நம்பாததும் உங்கள் இஷ்டம். அறிவிக்க வேண்டியது என் கடமை, எச்சரிக்க வேண்டியது எனக்கு கொடுக்கப்பட்ட ஊழியம். ஜாமக்காரன்**

சில காலமாகவே என்னையும். என் ஊழியத்தை நேசிக்கும் சில குடும்பங்கள் என்னோடு பகிர்ந்து கொண்டது என்னவென்றால், டாக்டர் புஷ்பராஜ் அவர்களுக்கு நாலமாவடி சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள்மேல் தனிப்பட்ட முறையில் எந்த பகையும், பொறாமையும் இல்லை என்று எங்களில் பலருக்கு மிக நன்றாக தெரியும். உங்கள் அழைப்பும், ஊழியமும் வேறே – அவருடைய ஊழியமும் அழைப்பும் வேறே. அப்படியிருக்க ஏன் அவரையே தாக்கி எழுதுகிறீர்கள். சகோ. DGS தினகரனைப்பற்றி சொல்லுவதுபோல் அவர் காருண்யா கல்லூரிக்காக பேசிய பொய்கள், பணம் சேகரிக்க துணிந்து அறிவித்த **இளம் பங்காளர் திட்டம்** என்ற **பொய்யான திட்டம்.** ஜெபத்தில் **கர்த்தர் சொன்னார்** என்ற பெயரில் கூறிய **பல பெரிய பொய்களையும்** நாங்களும் அறிவோம்.

ஆனாலும் நாங்கள் யாவரும் ஒருமித்த குரலில் கூறுவது என்னவென்றால் அவர் இவ்வளவு பொய்களை பேசினாலும் அவர் ஊழியம் மூலமாக ஆயிரம் ஆயிரமான மக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே! அந்த பெரும் ஆத்துமாக்களின் அறுவடைநிமித்தம் சகோ. DGS தினகரன் அவர்களை கர்த்தர் மன்னிக்க மாட்டாரா? மேலும் சகோ. தினகரன் கூறிய வேதத்தில் இல்லாத பல விஷயங்கள் குறிப்பாக **கர்த்தரை என் வீட்டில் கண்டேன், பரலோகத்துக்கு நான் பல முறை சென்றேன்**. பேதுருவை **எலியாவை** செத்துப்போன **என் மூத்த மகனை** கண்டு பேசி வந்தேன் என்று அவர் மேலும் மேலும் கூறிய பெரும் பொய் வெளிபாடுகளையும் **இவர் மூலமாய் இயேசுவை** ஏற்றுக்கொண்ட அந்த **திரளான மக்கள் நிமித்தம்** கர்த்தர் **தினகரனை இயேசி கிறிஸ்து மன்னிக்க மாட்டாரா** ? நம் தெய்வம் கொடூரமானவர் அல்லவே !

- ☐ அதைபோலவே சகோ. **மோகன் C.லாசரஸ், சத்தியம் TVயில்** காலையில் பேசும் **குடும்ப ஆலோசனை**, வாலிபர்க்கான செய்திகள், கொரோனா நாட்களில் அனைத்து சபைகளும் பூட்டப்பட்ட நிலையில் அவரது TV மூலம் செய்த ஜெபம் எத்தனை பேருக்கு பிரயோஜனமாக இருந்தது. **40 நாட்கள் உபவாச ஜெபம்** மிஷனரிகளை தாங்குதல்,

**ஏழைகளுக்கு** உதவுதல் இப்படிப்பட்ட நல்ல செயல்களை நாடே பார்த்து புகழும்போது நீங்கள் மட்டும் அவரைப்பற்றி குறை சொல்லி எழுதிக் கொண்டிருக்கிறீர்களே ! அவரின் ஜெபத்தில் பெயர்களை அழைக்கும் **பொய்கள்,** மற்ற பல குறைகள் **அவர் பரலோகம் செல்ல தடையாக** இருக்குமா? கர்த்தர் அவரின் மற்ற நல்ல செயல்களையும் கிரியைகளையும் கர்த்தர் **அங்கீகரிக்க மாட்டாரா ?** அவர் **ஜெபத்தில் பெயர் அழைப்பது** அவ்வளவு **பெரிய பாவமா** ? இவர்கள் இருவரைவிட நீங்கள் பெரிய நீதிமானா ? என்றெல்லாம் பலர் எனக்கு கோபத்தோடு எழுதியும் பேசியும் சலித்துவிட்டார்கள். எனக்கு கடிதம் எழுதிய இவர்கள் யாவரும் **பொய்யை பாவமாகவே கருதவில்லை** என்று தோன்றுகிறது. காரணம் இவர்களும் வீட்டில் **தொழிலில்** பொய் பேசுபவர்களாக இருப்பார்கள் என்பது நிச்சயம் ஆகும்.

அனைத்து கிறிஸ்தவ சபை **மக்களில் கொள்கை, உபதேசத்தில்** வித்தியாசம் உள்ள **அனைத்து கிறிஸ்தவர்களும்** மோகன் சி. லாசரஸ்ஸின் **கொரோனா கால ஜெபத்தில்** ஒவ்வொரு மாலை நேரமும் **சத்தியம் TVக்கு** முன்னால் தான் அமர்ந்திருந்தார்கள். சுருக்கமாக கூறினால் **நாடே அவரின் TVஜெபம் நடந்த எல்லா மாலை ஜெபத்திலும்** கலந்து கொண்டது என்றும் கூறலாம். உங்ளைப் போல் சிலர்தான் அந்த ஜெப நேரத்தை குறை கூறினர்.

☐ அன்பானவர்களே !

நீங்கள் குறிப்பிடும் ஊழியர் மோகன் C. லாசரஸ் அவர்களின் கூட்டத்தை தேடி போவோர்கள் எல்லாரும் **ஆவிக்குரிய ஜீவியத்தில் முதிர்ச்சி பெறாதவர்கள்** ஆகும். **உங்கள் துக்கம்** சந்தோஷமாக மாரும் – **இன்று அந்த அற்புதம்** உங்களில் நடைறெும் என்று அவர் கூறும் அந்த **ஜெப நேரத்துக்காக** காத்திருக்கிற உங்களை போன்றோர் யாவரும் **வசனத்தில வளராதவர்கள் ஆகும்.** வசனத்தின் ஆழத்தின் சந்தோஷத்தை ருசிக்கவும், வசனத்தில் வளரவும் ஆசைப்படுபவர்கள். மோகன் C. லாசரஸ், பால் தினகரன் போன்றோரின் கூட்டதகை குறிப்பாக சுகமளிக்கும் கூட்டத்தை விரும்பமாட்டார்கள்.

இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் வசனத்துக்கு கீழ்படிந்து கிறிஸ்துவின் மூலம் அற்புதங்களை பெற்றோர்கள். **அடுத்தகட்ட ஆவிக்குரிய ஜீவியத்துக்கு வளர ஆசைப்பட வேண்டும். சகோ. மோகன் C. லாசரஸ்** அவர்களின் பிரசங்கத்துக்கும் AOG சபை **பாஸ்டர் D. மோகன்** அவர்களின் (அன்னிய பாஷையை தவிற) அவருடைய பிரசங்கத்துக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசத்தை விளங்கிக்கொண்டவர்கள் ஒரே சமயம் TVயில் வெவ்வேறு சேனலில் மோகன் C. லாசரசுஸ், பாஸ்டர் D. மோகன் அவர்களும்

பிரசங்கித்தால் வசனத்தில் வளர்ந்து வளர ஆசைபடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் TVயில் **பாஸ்டர் D. மோகன்** பிரசங்கத்தைத்தான் கேட்க **விரும்புவார்கள்.**

- ☐ TVயில் **நம்பிக்கை** TV சேனலில் நல்ல செய்திகளை தரும் **பாஸ்டர் சாம் செல்லதுரை** அவர்களின் செய்தி எப்போது வரும் **கல்வாரி டெம்பிள்** Dr. சதீஷ்குமார் அவர்களின் செய்திக்காகவும் **செகன்ட்ராபாத்** பாஸ்டர் **ஸ்டீபன் பால்** அவர்கள் செய்திக்காகவும் **ஞாயிறு நம்பிக்கை** TVயில் திருமதி **பிரிசில்லா தைரியம்** அவர்கள் வெளிபடுத்தின விசேஷத்தில் கூறப்பட்ட ஆரம்ப காலத்தில் தோன்றிய 7 சபைகளைப்பற்றியும் அதன் சரித்திர சான்றுகளை படங்களோடு அவர் விளக்கி கூறுவதை கேட்டவர்கள் அந்த செய்தியை புகழ்ந்து பேசியதை கேட்டேன். அப்படியே குறிப்பாக TWRன் வேத பாடம் மிக அருமை ஆவிக்குறிய ஜீவியத்தை வாஞ்ஜிக்கிறவர்கள் நிச்சயம் விரும்புவார்கள்.

AVM **ராஜன்** மகள் வேத வசன விளக்கத்தை கேட்வர்கள் AVMராஜனைவிட அவர் மகள் மிக அற்புதமாக வேத வசன விளக்கத்தை கூறுகிறார்களே என்று கூறினார்கள். அதே **நம்பிக்கை** TVயில் **சத்தியவசன** நிகழ்ச்சியில் **Dr. சாம் கமலேசன்** –, **Dr. தியோடர் வில்லியம்ஸ், சகோ. சுசி பிரபாகரன்** புரோபசர் **எடிசன்** அவர்கள், **சகோ.வேதநாயக சாஸ்திரிகள், சகோ. பிரகாஷ் ஏசுடையான்** அவர்கள் பேசிய செய்திகள், இவர்களில் மரித்த சிலருடைய செய்திகளை திரும்ப ஒலிபரப்பும் போது நல்ல தெளிவுள்ள விசுவாசிகள் எத்தனை சந்தோஷத்துடன் அந்த செய்திகளை கேட்டு ருசிக்கிறார்கள் தெரியுமா ?

அதே **நம்பிக்கை** TVயில் பிரபல **வெள்ளைக்கார பிரசங்கிமார்களின்** நேர்முக சம்பாஷனை நிகழ்ச்சியில் **கருகலான வசனங்களுக்கு** அவர்கள் **தமிழ் மொழி பெயர்ப்பில்** பேசுவது எத்தனை சிறப்பானது. இப்படிப்பட்ட நல்ல செய்தியாளர்களை தொடர்ந்து பேச ஏற்பாடு செய்யும் சகோ. **நேரு தைரியம்** அவர்களையும் அவர் மகனையும் வாழ்த்துகிறேன்.

அதே சமயம் அதே நம்பிக்கை TVயில் சில **குப்பைகளையும்** கிறிஸ்தவ செய்தியாக பேசுவதையும் இவர்கள் அனுமதித்துள்ளார்கள். சதா சகோ. ஆனந்தஸ்ரா கர்த்தர் பரலோகத்திற்கு என்னை கூட்டி சென்று வானத்தின் நட்சத்திரங்களை காட்டினார், அதில் ஒரு புதிய நட்சத்திரத்தையும் காட்டினார். உலக விஞ்ஞானிகளுக்கு அது தெரியாது. உனக்கு மட்டும் காண்பிக்கிறேன் என்று கர்த்தர் என்னிடம் குறிப்பிட்ட திசையில் காட்டிய அந்த நட்சத்திரத்தை கண்டேன். நான் திரும்ப பூமிக்கு வந்த உடன் அமெரிக்க **நாசா விஞ்ஞானிகளிடம்** அதை கூறினேன். அவர்கள் உடனே தங்கள் விசேஷ கருவிகளைக்கொண்டு நான் காண்பித்த திசையில் பார்த்து அதிசயத்து, ஐயா ஞானிகள் கண்டுபிடிக்காத இந்த துருவத்தை நீங்கள் எப்படி பார்த்தீர்கள்? நீங்கள் யார்? என்று

பிரமித்தனர். இக் கதையை அவர் TVயில் கூறினார். யாராவது இதை நம்புகிறீர்களா? **நாசா விஞ்ஞானிகளை** இவர் நெருங்க முடியுமா? இவர் எப்போது அமெரிக்கா சென்று யாரிடம் விாரித்தார்? விபரம் கூறமுடியுமா? அதோடு செத்துப்போன ஏராளமானவர்களை **நானே உயிரோடு எழுப்பியிருக்கிறேன்** என்கிறார். இப்படி அபத்தமாக பேசுபவர்களையும் Bro. **தைரியம்** குடும்பத்தினர் எந்த நோக்கத்தில் இவர்களை அனுமதித்திருக்கிறார் என்று பலர் கேட்டதைத்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

இப்படிப்பட்ட இன்னும் பல போலி ஊழியர்களையும் நம்பிக்கை TV அடிக்கடி அனுமதிக்கிறது. என்னத்தான் பணம் நிறைய கொடுத்தாலும் இப்படிப்பட்ட பொய்களை TVயில்பேசி மக்களை கெடுக்கக் கூடாதே!

24 மணி நேரமும் TV சேனலை இவர்கள் நடத்த வேண்டுமானால் **அதிக பணம் தேவை.** அதற்காக பணம் தரும் ஸ்பான்சர்களை **நிகழ்ச்சியாளர்களை** தேடி கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேவையுள்ள சமயங்களில் பணம் படைத்த சில **குப்பை கிறிஸ்தவ செய்தியாளர்களையும்** இவர்கள் அனுமதிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட இன்னும் சில தவறான பிரசங்கமார்களின் பிரசங்கத்தை மக்கள் கேட்டு அதனால் அந்த மக்களுக்கு இயேசுவைப்பற்றியும், ஆவியானவர் பற்றியும் பார்ப்பவர்கள் நம் கர்த்தரைப்பற்றி தவறாக எணணுவார்ளே ! அதன் விளையைப்பற்றி இவர்கள் யோசித்திருந்தால் நிச்சயம் வசன அடிப்படையில் பிரசங்கிக்கும் தரமான பிரசங்கிகளை மட்டுமே அனுமதித்து ஆண்டவரின் நாமம் லட்சக்கணக்கான மக்களிடையே மகிமைப்பட்ட நம்பிக்கை TV சேனல் காரணமாக இருக்குமோ !

இதிலிருந்து யார் யார் **எந்த கிறிஸ்தவ சேனலை** ஆவலோடு பார்க்கிறார்கள் என்பதை வைத்தே அவர்களின் ஆவிக்குரிய **வேத அறிவையும்** ஆவிக்குரிய **வாஞ்ஜையையும்** நாம் நிதானிக்கலாம் . மேலே நான் குறிப்பிட்ட நல்ல TV பிரசங்கியாளர்கள் யாரும் **அன்னிய பாஷைகளை** பேசாதவர்கள் என்பதை கவணிக்க வேண்டும்

ஆகவே சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் **தனிப்பட்ட முறையில்** மிக நல்லவர்தான். ஆனால் **அந்தி கிறிஸ்து** அவரை தன் கருவியாக பயன்படுத்த பல வருடங்களுக்கு முன்பே திட்டமிட்டுவிட்டான்.

## ☐ மோகன் C. லாசரஸ் மூலமாக வர இருக்கும் 4 வித அபாயங்கள்

**ஜாமக்காரன் :** கீழே எழுதும் 4 வித அபாயங்களை குறித்த விஷயங்கள் இரட்சிக்கப்பட்டு வசனப்பிரகாரம் ஜீவிப்பவர்களுக்கும் வசனத்தின்படி வாழ விரும்புபவர்கள் மட்டும் விளங்கிக்கொள்ள முடியும், மற்றவர்களுக்கு என்மேல் வேறுப்பு கூடும்.

1) **அன்னிய பாஷை**

2) அனைத்து கிறிஸ்தவர்களையும் **இயேசுவை முகமுகமாய் பார்க்க பழக்கபடுத்துவது.**

3) **எல்லாரையும் குறிப்பாக வாலிப பிள்ளைகளை தீர்க்கதரிசிகளாக மாற்றுவது.**

4) வேதத்தில் உள்ள **வெளிபடுத்தின விசேஷத்துக்கு** மாற்றாக சகோ. **வின்சென்ட் செல்வகுமார்** கண்ட பொய்யான **வெளிபாடுகள்.** இனி வரப்போகும் நாட்களில் சம்பவிக்கபோகும் சம்பவங்களை குறித்த **தரிசனங்கள்** அடங்கிய அவருடைய புஸ்தகத்தைக் குறித்த ஆராய்ச்சி கூட்டத்தை இரகசியமாக ஆரம்பித்துவிட்டனர். ஆனால் அது எல்லாருக்கும் அல்ல. இவர்கள் தெரிந்தெடுக்கும் நபர்களுக்கு மட்டும் அழைப்பு கொடுத்து வரவழைப்பட்டு அவர்களை கொண்டு அந்த செய்திகளை மற்றவர்களுக்கு போதிக்க இந்த இரகசிய கூட்ட ஏற்பாடுகள் தொடங்கப்பட்டுவிட்டது.

**மேலே குறிப்பிட்ட நான்கு அபாயங்கள் பற்றி விளக்குகிறேன்.**

**முதல் அபாயம்**

கொரோனா காலத்தில சத்தியம் TVயில் சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் நடத்திய ஜெப கூட்டத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்துக்கு அழுது ஜெபித்த உடன் TVயை கவணித்துக்கொண்டு இருக்கும் மக்களையும் வீட்டில் TVக்கு முன் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருப்பவர்களையும் மோகன் C. லாசரஸ் பார்த்து இப்போது **சிறு பிள்ளைகள்** முதல் **பெரியாவர்கள் வரை அன்னிய பாஷைகளில்** ஜெபிக்க வேண்டும். ஆண்டவர் பாஷைகளை தருவார் என்று அறிவித்தவுடன் **தமிழ்நாட்டின் இரண்டு இடங்களில்** உள்ள குடும்பத்தார் டக் என்று TVயை **ஆப் செய்து** வீட்டு வேலைக்காரி முதல் TV ஜெபத்தில் பங்கு கொள்ள வந்த பக்கத்து வீட்டுக்காரர் யாவரையும் அனுப்பிவிட்டார். காரணம், **மோகன் C. லாசரஸ் தொடர்ந்து பேசுவதை இவரகள் யாரும் கேட்டுவிடாதபடி** தடுக்கவே **TVயை ஆப் செய்ததாக கூறக்கேட்டேன்.**

அந்த சம்பவத்தை கூறிய இரண்டு குடும்பங்களும் நல்ல ஆவிக்குரிய குடும்பம் ஆகும். மோகன் C. லாசரஸ் செய்தி ஜெபம் யாவும் ஒரு வேளை **புறமதஸ்தருக்கு** பிரயோஜனப்படலாம். ஆனால் **சிறுபிள்ளைகளையும். இந்து மதத்தினரையும் அன்னிய பாஷை** என்ற பெயரில் **உளர சொல்வது மிக ஆபத்தானது.** அது அவர்களை பயித்தியக்காரர்கள் ஆக்குவதற்கு சமம். ஆகவேதான் தொடர்ந்து அவரின் நிகழ்ச்சியை பார்க்காதபடி **TVயை ஆப் செய்தேன்** என்றனர்.

**ஆவிக்குரிய ஜீவியத்தில்** வளர்ந்த அவர்களுக்கு **இது ஆபத்தானது** என்று விளங்கினது. ஆனால் மற்றவர்களுக்கு இதன் ஆபத்து விளங்காதே !

திருப்பத்தூர் கூட்ட கூட்டணியில் இருந்த மரித்த சகோ. சாம் ஜெபதுரை அவர்களும் சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களும் அன்றே திட்டமிட்ட விஷயம்தான் **அன்னிய பாஷை பேசுவது எப்படி** என்ற புஸ்தகம் அச்சடிக்க வேண்டும் என்பதாகும். இப்போது சகோ. மோகன் C. லாசரஸ் அந்த புஸ்தகம் வெளிவர பொருப்பெடுத்துள்ளார்.

அவர்கள் ஒரு புதிய வேதாகமம் அச்சடித்து வினியோகம் செய்ய ஆரம்பித்துவிட்டனர். **தூத்துக்குடியில்** சகோ. **ஆல்பிரட் தேவ தாஸன்** என்பவர் அந்த புது வேத புஸ்தகத்தை எழுதி தயாரித்துள்ளார். அந்த வேத புத்தகத்தின் பெயர் ??? (நான் பெயரை விளம்பரப்படுத்த விரும்பவில்லை) அந்த வேதாகமத்தில் **ஆவியானவர்** ஆதியாகமத்தில் **ஜலத்தில் அசைவாடினார்** என்ற வசனம் முதல் வேதம் முழுவதும் **அன்னிய பாஷையை** ஆங்காங்கு இடைச்சொருகலாக எழுதி அதை வாசிப்பவர்கள் எப்படியும் **அன்னிய பாஷை** பேசி விடுவார்கள் என்ற நம்பிக்கையில் மோகன் C. லாசரஸ் வெறித்தனமாக அந்த வேத புத்தகம் அனைத்து கிறிஸ்தவர்கள் கைகளிலும் கிடைக்க வேண்டும் என்று பல தவறான யுத்திகளை கையாண்டிருக்கிறார். வாசகர்கள் ஏமாந்து விடாதீர்கள். கத்தோலிக்க சபையினர் தள்ளுபடி வேதாகமத்தை உலக கிறிஸ்தவர்கள் அனைவரும் தள்ளி வைத்ததைபோல இந்த வேதம் மற்ற கிறிஸ்வர்கள் கையில் சேராதபடி பார்த்துக்கொள்ளுங்கள். மோகன் C. லாசரஸ் **கர்த்தர் சொன்னார், ஆவியானவர் கூறினார்** என்று உங்களை மயக்கி பேசுவார் நம்பிவிடாதீர்கள். உங்களை மூளை சலவை செய்ய இது பிசாசின் திட்டமாகும்.

அந்த அன்னிய பாஷையை பேச பயின்றால் பரிசுத்த **ஆவியை பெற்றதாக அர்த்தமாம்.** அதற்கு அபிஷேகம் என்றும் இவர்கள் அழைக்கிறார்கள். **அன்னிய பாஷை பேசிவிட்டால்** ஒவ்வொருவரும் **தீர்க்கதரிசனம்** கூறலாம், வியாதியஸ்தரை சுகப்படுத்தலாம், **பிசாசுகளை ஓட்டலாம், பில்லி சூன்ய தகடுகளை** எடுக்கலாம், அதன்மூலம் ஒவ்வொருவரும் பெரிய வல்லமை உள்ள **ஊழியராகலாம்.** சபையை நடத்தும் **பாஸ்டராகலாம்** என்று இவர்கள் கூறுகிறார்கள். இந்த ஆசை பெரும்பாலானவர்களுக்கு உண்டு.

இந்த சிந்தை. இந்த ஆசை ஒவ்வொரு விசுவசாசிகளுக்கும் வந்தால் சபைகள் உடையும், குடும்பங்கள் உடையும். **கிறிஸ்தவர்கள்** யாரும் உண்மையான **வேத புத்தகத்தை** தேட மாட்டார்கள், இவர்கள் எழுதிய புது வேத புத்தகத்தின்படி நடப்பார்கள். அதுதான் **அந்தி கிறிஸ்துவின் இரகசிய திட்டம்.** அந்த திட்டத்துக்கு பல வருடங்களுக்கு முன்பே பிசாசால் ஆயத்தப்படுத்தப்பட்ட பாத்திரம்தான் சகோ. **மோகன் C. லாசரஸ்** (நாலுமாவழி) அவர்களாகும். இவர் மூலம் சிறுவர் கூட்டத்தில் **5 வயது பிள்ளைகளெல்லாம்**

**அன்னிய பாஷை** பேசுவதை CDயில் பார்க்கலாம். இவர்களின் TV நிகழ்ச்சியிலும் பார்க்கலாம்.

☐ இந்த விஷயத்தில் வாசகர்கள் அறிந்துக்கொள்ள வேண்டியது என்னவென்றால் அன்னிய **பாஷை** ஒரு **வரம்**, Gift, **அது கர்த்தரால் மட்டுமே கொடுக்கப்படவேண்டும்**. நாம் கேட்கக்கூடாது. மோகன் C. லாசரஸ் **அன்னிய பாஷையில் பேசுங்கள்** என்று கட்டளையிட்ட உடன் அவர் கூட்டத்தில் கலந்துகொண்ட யாவரும் அன்னிய பாஷையில் பேசுகிறார்களே, அது **பரிசுத்த ஆவியே** அல்ல. அது வேதம் கூறுகிறபடி **வேறொரு ஆவியாகும். ஆவிகள் அனேகம், நிதானித்து அறியுங்கள்** என்று பவுல் கூறியிருக்கிறார். மோகன் C. லாசரஸ் கட்டளையிட்டவுடன் நீங்கள் பேசினால் **பிசாசு உங்களை** உளர வைப்பான் என்பதை உணருங்கள். **ஆவியை** பகுத்தறியுங்கள். **வேறு ஆவிக்கு** அடிமைபட்டு விடாதிருங்கள். இதை எச்சரிக்கையாக வாசகர்களாகிய உங்களுக்க அறிவிக்கிறேன்.

☐ இவர்கள் பேசுவது போலியான அன்னிய பாஷை என்தை கண்டுபிடிக்கவேண்டுமானால். **மோகன் C. லாசரஸ்,** பாஸ்டர் D. **மோகன்** இவர்கள் இருவரும் **பிரசங்கம்** செய்யும்போதும், **ஜெபம்** நடத்தும்போதும் **நடுநடுவே** இரண்டு வார்த்தை அல்லது மூன்று வார்த்தை **அன்னிய பாஷை** பேசுவார்கள். அதை கவணித்தாலே போதும். இன்னும் தெளிவாக அறிய வேண்டுமானால் **பாஸ்டர் சேனாபதி** என்பவர் TVயில் தன் பிரசங்கம் முடித்து ஜெபிப்பார். **சரளமாய்** அன்னிய பாஷை பேசுவார். அத்தனையும் **போலியானவையாகும்.** அவர் **முஸ்லீம் தெருவில்** குடியிருப்பார் போல இருக்கிறது. அவர் பேசும் அன்னிய பாஷையில் **உருது** மொழி, **சவுராஷ்ட்ரா** மொழிகளெல்லாம் சரளமாக கலந்துவரும். இந்த லட்சனத்தில் அதற்கு அவரே விளக்கமும் கொடுப்பார்.

☐ போலி அன்னிய பாஷை பற்றி இன்னும் தெளிவாக அறிய வேண்டுமானால் ஏஞ்ஜல் TVயில் சாது செல்வராஜ் அவர்களின் **நல்லா இருக்கிறீங்களா** நிகழ்ச்சியில் மணிக்கணக்காக சலிப்புடன் பரிதாபமாக உட்கார்ந்திருக்கும் **அந்த பெண்,** சிறுபிள்ளைகள் ஜெப கூட்டம் நடத்தும்போது மதியான வேளையில் அவர் சிறுபிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கும் **அன்னிய பாஷையை** கண்டாலேபோதும் இவர்கள் எல்லாம் தவறான ஆவியை பெற்றவர்கள்களாகும்.

மதியம் ஏஞ்ஜல் TVயில் 5 பேர் கூடி ஜெபிக்கும் ஜெபத்தில் ஒவ்வொருவரும் பேசும் அன்னிய பாஷை பார்க்க தமாஷாக இருக்கும். புறமதஸ்தர்கள் என்ன நினைப்பார்கள் என்ற கூச்சம், பயம் இவர்களுக்கு அறவே இல்லை.

**இரண்டாம் அபாயம்**

கொரோனா காலத்தில் சத்தியம் TVயில் மோகன் C. லாசரஸ் நடத்திய 40 நாள் உபவாச ஜெப நிகழ்ச்சியிலும் அதன்பின் மோகன் C. லாசரஸ் பேசிய TV நிகழ்ச்சியிலும் அவர் பிரசங்கம் செய்து முடித்தபின் அவர் பேசும் போது தான் ஜெபிக்கும்போதெல்லாம் **இயேசு கிறிஸ்துவின் முகத்தை** முகமுகமாய் கண்டு ஜெபிப்பேன். அவர் முகம் காணும்போதெல்லாம் எத்தனை இன்பம், எத்தனை பரவசம் என்று கூறி அதே **அனுபவத்தை** நீங்களும் பெறலாம். நம் தேவன் பாரபட்சம் உள்ளவர் அல்ல. ஆரம்ப நாட்களில் மோகன் C. லாசரஸ் ஆகிய நான் எங்கள் கிராமத்திலுள்ள தேறி காட்டில் மணிக்கணக்காக ஜெபிப்பேன். ஆனாலும் எனக்கு ஜெபித்த திருப்தி உண்டாகவில்லை.

ஒருநாள் சகோ. DGS **திரகரனின்** பிரசங்கத்தை மைதானத்தில் அமர்ந்து கேட்டேன். அவர் ஜெபிக்கும்போதுதான் **இயேசுவின் முகம்** கண்டு பரவசப்பட்டு ஜெபிப்பதைப்பற்றி அவர் விளக்கிக் கூறும்போது எனக்குள் அந்த அனுபவத்தைபெற ஆசை எழும்பியது. அதன்பின் சகோ. DGS தினகரன் எந்தெந்த ஊரில் பிரசங்கம் செய்கிறாரோ அங்கெல்லாம் சென்று அவர் அனுபவத்தை ஊன்றி கவணிப்பேன். மேடையிலேயே அவர் இயேசுவிடம் பேசுவதை பார்த்து எனக்கு ஆவல் அதிகரித்து உடனே நான் உபவாசித்து எனக்கும் அந்த அனுபவம் வேண்டும் என்று கதறினேன். பல நாட்கள் உபவாசித்தேன், ஒருநாள் **இயேசுவின் முகத்தை முகமுகமாய் கண்டேன்.** எத்தனை பரவசம், அதன்பின் என் ஊழியத்தில் எத்தனை அற்புதங்கள் தொடர்ந்து நடந்தது. அதே இயேசுவை நீங்களும் இன்றைக்கு இந்த ஜெப நேரத்தில் **இப்போதே** இயேசுவை பார்க்கலாம். எல்லாரும் இப்போது முழங்கால் இட்டு ஜெபியுங்கள். **சிறுவர்களுக்கும் இயேசு தன் முகத்தை** மறைப்பதில்லை. நீங்கள் யாவரும் **இயேசுவை முகமுகமாய்** பார்க்கலாம்.

இப்படிப்பட்ட உபதேசம் **அந்தி கிறிஸ்துவால்** உண்டானது ஆகும். உண்மை கிறிஸ்தவர்கள் **தரிசித்து** நடக்காமல், **விசுவாசித்து** நடப்பவர்களாகும். **கண்டு விசுவாசிப்பவர்களைவிட** காணாமல் **விசுவாசிப்பவர்களே** அதிக பாக்கியவான்கள் என்று இயேசுவே கூறினார். ஆனால் **மோகன் C. லாசரஸ்** இயேசுவின் உபதேசத்துக்கு விரோதமாக பேசி அவரின் சொந்த அனுபவத்தை உபதேசிப்பதை TV வழியாக பொதுமக்களை காண செய்து அவர்களை தவறான பாதைக்கு வழி நடத்துகிறார்.

## இயேசுவின் முகம் எப்படி இருக்கும்

சகோ. DGS **தினகரன்** கண்ட **முகம் வேறே – மோகன் C. லாசரஸ் கண்ட முகம்** வேறே.ஏஞ்சல் TV பொய் தீர்க்கதரிசயான **சாது சுந்தர் செல்வராஜ்** பார்த்ததாக கூறும் **முகம் வேறே. இவரின் குருவான** மரித்த சகோ. **ஜான் ரபீந்திரநாத்** பார்த்து விவரித்ததைதான்

சாது செல்வராஜப் விவரிக்கிறார். சகோ. **வின்சென்ட் செல்வகுமார்** கண்டதாக கூறும் **இயேசுவின் முகம்** வேறே. ஏன் இந்த முரன்பாடு? யோசித்துப் பாருங்கள் ! இவர்கள் யாவரும் கண்ட இயேசுவின் முகங்கள் யாவும் **கற்பனை** முகங்கள். **காலண்டரில்** வரையப்பட்ட முகங்கள்.

**தமிழ்நாட்டு மக்களும்,** ஊழியர்களும் கண்ட இயேசுவின் **முதல் முகம்** எது என்றால் **கருணாமூர்த்தி** என்ற சினிமாவில் இயேசுவாக நடித்த அந்த **தெலுங்கு நடிகரின் முகம்தான்.** அந்த சினிமாவை எங்கெங்கு காட்டினார்களோ ! எந்தெந்த பாஷையில் மொழிபெயர்த்து இந்தியா முழுவதும் அந்த சினிமாவை காட்டினார்களோ அங்கெல்லாம் ஒரு பெரும் எழுச்சியே ஏற்பட்டது.

நான் வட இந்தியா ஊழியத்துக்கு சென்றபோது அங்குள்ள மிஷனரிமார்கள் அண்ணே **கருணாமூர்த்தி** படத்தை கடந்த மாதம் இங்குள்ள எந்தெந்த கிராமத்திலே ஜெனரேட்டர் வைத்து காட்டினோமோ அங்கெல்லாம் உள்ள **ஆதிவாசிகள்** பெரும்பாலோர் கூறியது மிகவும் ஆச்சரியத்தை தந்தது. ஒவ்வொருவரும் நேற்று இரவு **ஈசாமசி** இயேசு **கிறிஸ்து** என் **கனவில் வந்தார்**. சிலர் நான் **பிரகாசத்தின் நடுவில்** அந்த **இயேசுவை கண்டேன்** என்று கூறினார்கள். அவர் முகம் எப்படியிருந்தது என்ற கேட்டபோது கடந்த வாரம் **கருணாமயா** சினிமாவில் சிலுவையில் அடிக்கப்பட்ட **நபரைபோலவே இருந்தார்** என்றார்கள்.

- ☐ அவ்வளவு ஏன் சினிமா நடிகராக வாழ்ந்த சகோ. AVM **ராஜன்** அவர்களே தான் **கருணாமூர்த்தி** சினிமா பார்த்த அன்று இரவே **இயேசுவை நான் முக முகமாய்** கண்டு இயேசுவை என் **குல தெய்மாக** ஏற்றுக்கொண்டேன் என்று தன் சாட்சியில் கூறியதை உங்களில் பலர் கேட்டிருக்கலாம்.
- ☐ அதன்பின் இயேசுவின் முகம் பிரபலமானது **கேம்ப்பஸ் குருசேட்** ஸ்தாபனத்தார் காண்பித்த **ஜீசஸ் கிரைஸ்ட் ஆப் நாசரேத்** என்ற சினிமா படம். அதில் ஒரு வெள்ளைக்காரர் **இயேசுவாக** நடித்திருந்தார். அவர்கள் அந்த சினிமாவை இந்தியாவின் பட்டி தொட்டி எல்லாம் காட்டினார்கள். பெரிய அளவில் மக்கள் அந்த சினிமாவில் இயேசுவாக நடித்த அந்த வெள்ளைக்காரர் **முகத்தைத்தான்** இயேசுவாக பலர் தங்கள் **மனதிலும், சொப்பனத்திலும்** கண்டார்கள்.
- ☐ அதன்பிறகு இயேசுவின் முகம் மிக அதிகமானவர்களை தொட்டது பிரபல ஹாலிவுட் நடிகர் **கிப்ஸ்ன்** அவர்கள் தயாரித்து எடுத்த சினிமா மிகவும் பிரபலமடைந்தது அதில் **இயேசுவின்** இரத்தம் வழிந்த **அந்த முகத்தை** கண்டு அழாதவர்கள் இல்லை எனலாம். அதன் இயேசுவின் முகம் பலருடைய ஜீவியத்தை மாற்றியது சிலர் அந்த இயேசு முகத்தை

பிரேம் செய்து பலர் தங்கள் வீடுகளில் தொங்கவிட்டுள்ளனர். அந்த சினிமாவில் **நடித்தவரின் முகத்தை** தரிசனத்தில் கண்டேன் என்று கூறியவர்களைப்பற்றி அமெரிக்காவின் பிரபல ஆங்கில பத்திரிகையில் விமர்சனமாக எழுதியிருந்தனர்.

அதற்கு பின் இயேசுவைப்பற்றி ஏராளமான சினிமா படங்கள் வெளிவந்து விட்டன.

இப்படி **சினிமா நடிகரின்** முகத்தைதான் **இயேசுவின் முகமாய்** நம் பிரபல TV **ஊழியர்களும்** கண்டார்கள்.

உண்மையான **இயேசுவின் முகம்** மேலே குறிப்பிட்ட இயேசு பெயரில் வந்த சினிமாவில் காணப்பட்ட முகமே இல்லை. சில **நரைத்த முடி** நிறைந்தவராக கண்டார்கள். சிலர் **கருத்த** முடியுள்ளவராக இயேசுவை கண்டார்கள். இவைகள் யாவும் வெறும் கற்பனையே ! இப்போதுள் இயேசுவின் முகம் போட்டோவாக பெரும்பாலான கிறிஸ்தவர்களின் வீடுகளிலும் மாட்டி வைத்துள்ளனர். என் வீட்டிலும் என் பெற்றோர் இயேசுவின் போட்டோ மாட்டி வைத்தார்கள்.

☐ வேத புத்தகம் என்ன சொல்கிறது என்று கவணிப்பதான் விவேகம். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மரித்து. மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து சீஷர்களுக்கும் பல நூற்றுக்கணக்கான நபர்களுக்கும் **நேரில் தன்னையும் தன் முகத்தையும்** காட்டினார் என்று வேத வசனம் கூறிகிறது. ஆனால் இயேசு பரமேறி பரலோகம் சென்றபின் எந்த ஒரு சீஷனும் எந்த ஒரு விசுவாசியும் **இயேசுவை முகமுகமாய்** பார்த்ததில்லை.

**பவுல்** கூறும் போதுகூட தான் இயேசுவை **ஞான திருஷ்டியில்** கண்டதாகவும், **தரிசனத்தில்** பலமுறை கண்டதாகவும் கலா 1:1-18 தன்னை **அப்போஸ்தலனாய்** தகுதிபடுத்த இயேசு 3 வருடங்கள் என்னை அரபி தேச பாலைவனத்துக்கு அழைத்து சென்று **ஆவியில் நிறைத்து,** இயேசு **தன்னையும்** தான் வாழ்ந்தகால சம்பவங்களையும் **திருவிருந்து** சம்பவங்களையும் ஆவியில் இயேசு தனக்கு **நேரில் காண்பித்ததாக** கூறுகிறார். 1 கொரி 11:23. **திருவிருந்தின் சட்ட** திட்டங்களை பற்றி பவுல் விளக்கும்போது, குறிப்பாக **திருவிருந்து** எடுப்பதற்கான **தகுதிகளை** குறித்து போதிக்கும் போது ஆரம்ப வார்த்தையாக பவுல் கூறுவதாவது, **நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்** என்கிறார். இயேசு பூமியில் வாழ்ந்தபோது **இயேசுவை** ஒருமுறைக்கூட நேரில் காணாத **பவுல்** இவ்வளவு தெளிவாக திருவிருந்து நிகழ்ச்சியை கூறியது எப்படி ? தான் கண்ட **தரிசனம், ஞான திருஷ்டி, ஆவியிலும்** அவர் **இயேசுவின் முகத்தை** கண்டிருக்கிறார். அவர் கண்ட முகமும், பேதுரு, யோவான் மற்றும் சீஷர்கள் கண்ட முகமும் ஒன்றாக இருந்திருக்க வேண்டும்.

வேதம் இப்படி கூறியிருக்க சகோ. **மோகன் C லாசரஸ்** அவர்கள் கண்டதாக கூறுவது **இயேசுவின்** உண்மையான முகம் அல்ல. அது **கற்பனை முகம்.**

புதிய ஏற்பாட்டு திருச்சபை நாம் இயேசுவை இந்த உலகத்தில் முகமுகமாய் பார்க்க முடியும் என்று நமக்கு போதிக்கவில்லை. ஆகவே சகோ. DGS **தினகரன்,** சகோ. **மோகன் C லாசரஸ்** போன்ற இன்னும் பலர் கண்டதாக கூறும் இயேசு பவுல் கூறிவதுபோல் அது **வேறொரு இயேசு** – அது வேறு **உபதேசம்,** அது அந்தி கிறிஸ்துவின் **உபதேசம்.**

அந்த **அந்தி கிறிஸ்து** காண்பிக்கும் **வேறொரு இயேசுவை** உலக மக்கள் காணச்செய்ய மோகன் C லாசேரஸ் முயற்சிக்கிறார். அதனால்தான் **மோகன் C லாசரஸ்** விசிறிகளான அந்த குடும்பம் எனக்கு எழுதம்போது, இப்போது அவர்கள் விசுவாசத்தில், வசனத்தில் **தேறினவர்களாக இருந்ததால்** சகோ. மோகன C லாசரஸ் அவர்கள் **இயேசுவை இப்போது எல்லாரும் பார்க்கலாம்,** எல்லாரும் **அன்னிய பாஷை** பேசலாம் என்று ஜெப முடிவில் கூறியவுடன் **சத்தியம் TV சேனலில்** நடந்த அந்த உபவாச ஜெபத்தை தொடர்ந்து யாரும் பார்க்கவிடாதபடி குறிப்பாக சிறு பிள்ளைகள் பார்ககாதபடி மோகன் லாசரலஸ் பிரசங்கம் செய்து முடித்தவுடன் **TVயை ஆப் செய்து விட்டனர்.**

### மூன்றாம் அபாயம்

எல்லாரையும் **தீர்க்கதரிசியாக்கும்** திட்டம் ஆகும். ஏற்கனவே ஏஞ்ஜல் TVயில் சாது **செல்வராஜ், வின்சென்ட் செல்வகுமார்,** மோகன் C. லாசரஸ் ஆகிய இவர்கள் **மூவரணியாக** செயல்பட்டு **மார்வாடிகளைபோல** தரையல் அமர்ந்து ஏஞ்ஜல் TVயில் சம்பாஷித்தபோது கிறிஸ்தவர்கள் அனைவரையும் **தீர்க்கதரிசிகள்** ஆக்கும் திட்டம் அதில் **பிரதானமாக** இடம் பெற்றது.

வேதம் கூறுவதென்ன கவணியுங்கள். 1 கொ. 12:7 வேதத்தில் **ஏராளமான வரங்கள்** உண்டு. பவுல் தான் கொரிந்து சபைக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பாக **9 வரங்களைப்பற்றி** மட்டும் குறிப்பிட்டு அதன் செயல்பாடுகளைப்பற்றியும் குறிப்பிடுகிறார். அதில் ஆவியானவருடைய வரங்களிள் அவனவனுக்கு அருளப்பட்டது யாவும் **பொது நன்மைக்காகவே** (இது கத்தோலிக்க மொழி பெயர்ப்பு) மூல பாஷையிலும் வரங்கள் யாவும் **பொது நன்மைக்காகவே** என்று எழுதப்பட்டுள்ளது.

1 கொரி 12ம் அதிகாரம் முழுவதும் வாசித்தால் **ஒரு மனுஷனுக்கே 9 வரங்களும்** கொடுக்கப்படுவதில்லை என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. அதனால்தான் அந்த விவரங்களை குறிப்பிடும்போது **ஒருவனுக்கு** ஒரு வரம் வெறேருவவனுக்கு வேறொரு வரம் இப்படியாக 9 வரங்களும் **ஒவ்வொருவனுக்கும்** தனித்தனியாக அருளப்படுகிறதாக பவுல் குறிப்பிடுகிறார்.

ஆனால் இந்த **மும்மூர்த்திகளோ** ஒவ்வொரு **கிறிஸ்தவனையும்,** ஒவ்வொரு **சிறுவன், சிறுமி, இவர்களோடு வயிற்றில் வளரும் குழந்தை யாவரையும் தீர்க்கதரிசிகளாக்கி** விடுவது என்று 3 பேரும் **தீர்மானித்து ஏஞ்ஜல்** TVயில் கூறியதை கேட்டிருப்பீர்கள். அதன்பின் மூவரணி உடைந்து சிதறியஉடன் சகோ. மோகன் C. லாசரஸ் தீர்க்கதரிசன வரத்தை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளும் தவறான உபதேசத்தை மறுபடியும் மக்களுக்கு TVமூலம் அறிமுகப்படுத்த ஏற்பாடு செய்கிறார்.

இதில் முக்கியமாக நாம் அறியவேண்டியது வேத வசனத்தின் **வரம்** Gift கேட்டுகொடுக்கப்படுவதில்லை. அது ஆவியானவரால் கிறிஸ்துவின் அனுமதியுடன் கர்த்தரால் கொடுக்கப்படுவது. **வரங்கள் கேட்கக்கூடாது** என்பதை நான் ஏற்கனவே ஜாமக்காரனில் திட்டமாக எழுதியுள்ளேன்.

இப்போது பிரிந்த மூவரணியினரில் **இரண்டுபேர்** மட்டும் மறுபடியும் ஒன்று சேர்ந்துள்ளனர். அவர்கள் சகோ. மோகன் C. லாசரஸ் 2) சகோ. வின்சென்ட் செல்வகுமார் என்பவர்களாகும்.

இப்போது சகோ. மேகன் C. லாசரஸ் மட்டும் தன் சொந்த TV சேனலாய் அறியப்படும் **சத்தியம்** TV யில் தொடர்ந்து தன் பிரசங்கத்தில் குறிப்பிடுகிறார். **பழியை கர்த்த**ர்மேல் போட்டுவிடுகிறார். **கர்த்தர் என்னை சொல்ல சொன்னார்** என்று அவர் கூறினால் யாரும் அவரை கேள்விகேட்க முடியாதே. இவர் ஜெபத்தில் **பெயர் அழைப்பதே பொய்** தீர்க்கதரிசனமாகும் என்பதை பலராலும் என் **ஜாமக்காரன்** மூலமாகவும் பலமுறை சுட்டிக்காட்டினாலும். துணிந்து இவர் மக்களை ஏமாற்றிக்கொண்டுதான் இ ருக்கிறார்.

எரே 14:14 **என் நாமத்தைக்கொண்டு** பொய்யாக **தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை. நான் அவர்களை கற்பித்ததுமில்லை.** அவர்களோடே பேச நினைத்ததுமில்லை (ஆனால் மோகன் C. லாசரஸ் **கர்த்தர் சொன்னார்** என்றே கூறுகிறார். **இல்லாத விசேஷத்தையும்** தங்கள் **இருதயத்தின் கபடத்தையும் இவர்கள் உங்களுக்கு தீர்க்கதரிசனமாய்** சொல்லுகிறார்கள்.

**தங்கள் இருதயத்தில் இருக்கிதையே** எடுத்துத் தீர்க்கதரிசனம் என்று சொல்லுகிறவர்ளோடே **நீ சொல்லவேண்டியது. தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும் தங்களுடைய (பிசாசின் ) ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ!**

உபா. 18:20 **சொல்லும்படி நான் கட்டளையிடாத** வார்த்தையை (இயேச என்னும்) **என் நாமத்தினாலே சொல்லத்துணியும் தீர்க்கதரியும்**.................... சாகக் கடவன்.

வேத வசனம் அவ்வளவு திட்டவட்டமாக எச்சரிக்கும்போது சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் தான் **தீர்க்கதரிசனம்** என்னும் பெயரில் **பொய்களைப்பேசி** இவர் கூட்டத்தில் வந்த **அனைவரையும் தீர்க்கதரிசிகளாக** மாற்ற முயல்வது எத்தனை ஆபத்தானது.

அதனால்தான் நான் சொல்கிறேன். இவர் கூறுவதை நம்புகிறவர்கள். இவர் உபவாசத்தை கேட்க விரும்புகிறவர்கள் **வசனத்தில் வளராத கிறிஸ்தவர்கள் ஆகும்.** இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் **ஜெபம் செய்வார்கள், ஜெபத்தில் அழுவார்கள்.** ஆனால் தன் **சொந்த வாழ்க்கையில்** சாட்சியிருக்காது வீட்டில் **சாட்சியிருக்காது. சமாதானமும்** இருக்காது.

**எல்லாரையும் தீர்க்கதரிசிகளாக்கும்** இவரின் திட்டம் இவர் மூலமாய் மக்ளிடையே வர இருக்கும் மூன்றாம் ஆபத்தாகும் என்று குறிப்பிடுகிறேன்.

## நான்காம் ஆபத்து

சகோ. மோகன் லாசரஸ் மூலமாக வரும **நான்காம் ஆபத்து** என்னவென்றால்.

### புதிய வெளிப்படுத்தல் புஸ்தகம்

நம் வேத புஸ்தகத்தில் உள்ள **வெளிப்படுத்துதல்** வசேஷ புஸ்தகத்துக்கு ஒப்பான ஒரு புஸ்தகத்தை இவர்கள வெளியிடப் போகிறார்கள். சில வருடங்களுக்கு முன்பே **வின்செண்ட் செல்வகுமாருக்கு** கடைசி கால சம்பவங்களைப்பற்றி கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தியதாக சொல்லப்பட்ட செய்திகளை ஒரு **புஸ்தக வடிவில் அச்சிட்டு சிறப்பு வேதாகம வகுப்பு** என்ற பெயரில் தாங்கள் தெரிந்தெடுக்கும் **சிலரை மட்டும் ஒரு தனி இடத்துக்கு** வரவழைத்து நம் வேத புத்கத்தின் **போட்டியாக வெளிப்படுத்தல் புஸ்தகத்தை** தாங்கள் **தெரிந்தெடுக்கும் நபர்களுக்கு மட்டும் போதித்து** அவர்களை **தீர்க்கதரிசிகளாக்கி,** அவர்கள் **பயிற்சி** முடிந்த உடன் தாங்கள் கற்ற **வின்செண்ட் செல்வகுமாரின்** வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் உள்ள **விஷயங்களை** இவர்கள் **பல சபைகளுக்கு சென்று அங்குள்ளவர்களுக்கு** இந்த **புதிய வெளிபடுத்தல் விவரங்களை** அறிவித்து அவர்களை **வேத வசனத்திலிருந்து விலக்கி** இவர்கள் **உபதேசத்துக்கு கீழ்படிய** செய்வது அல்லது **கைக்கொள்ளச் செய்வது.** இது மோகன் C. லாசரஸ் மூலம் வர இருக்கும் **நான்காம் ஆபத்தாகும்.**

இந்த புதிய வெளிப்பாட்டு புஸ்தகத்தின் வகுப்புகள் பற்றிய விளம்பரங்கள் இவரின் இயேசு விடுவிக்கிறார் பத்திரிக்கையிலும் மற்றும் அவர்களின் மற்ற பத்திரிகைளிலும் **விளம்பரம் வெளிவந்துவிட்டதை** நீங்கள் அறிவீர்கள். ஆகவேதான் இந்த **அறிவிப்பையும் எச்சரிப்பையும்** இப்போது **பகிரங்கமாக வெளியிடுகிறேன்.** வாசகர்கள் **ஜாக்கிறதையாயிருங்கள்.**

மோகன் C. லாசரஸ்ஸின் குடும்ப ஆலோசேனை நிகழ்ச்சியில் **உங்கள் குடும்பத்தோடு நானும் இணைந்து** ஜெபிக்க போகிறேன் என்ற அவரின் அறிப்பு கேட்பதற்கு **ஆவிக்குறிய ஆலோசனை** மாதிரி இருக்கும். ஆனால் இதன்பின் னால் அவரின் **உண்மை நோக்கம்** என்ன என்பதையும் நான் குறிப்பிட்ட **நான்குவித அபாயங்கள்** குறித்தும் சிந்தித்து அவைகளை **வேத வசனத்தோடு** ஒப்பிட்டு பார்த்தால் **அபாயம் என்ன** என்று உங்களுக்கு விளங்கும்.

நான் எழுதியது அனைத்தும் தவறு என்று நினைப்பவர்கள் எழுதியதில் **என்ன தவறு எது தவ**று என்பதையும் **எனக்கு தைரியமாக எழுதுங்கள்.** நான் உங்கள் **பெயரையோ,** விலாசத்தையோ ஒரு நாளும் வெளியிட மாட்டோன்.

வாசகர்களுக்காக மட்டும் இதை எழுதுகிறேன். இது கடைசி காலம் கள்ள **தீர்க்கதரிசிகளைக்குறித்து போதுமான அளவு** நம் கர்த்தர் எச்சரித்துவிட்டார். நான் எழுதியதை **நம்புவதும் நம்பாததும் உங்கள் இஷ்டம்.** ஜெபிக்கிறேன்.

## ஜாமக்காரன் வாசகர்களுக்கு

ஜாமக்காரன் மாதாந்தர பத்திரிகை யாருக்காவது வந்து சேரவில்லை என்றால் உடனே உங்களின் முழு **விலாசத்தையும் தொலைபேசி** எண்ணையும் எழுதி அனுப்பினால், உடனே Speed Post தபால் மூலம் அனுப்பிதரப்படும். **எந்த மாதத்தின்** பத்திரிகை உங்களுக்கு வரவில்லை என்ற விபரத்யையும் தெரியப்படுத்தவும்.

**புதிதாக ஜாமக்காரன்** பத்திரிகை தேவைப்படுவோர் ஊங்களின் முழு விலாசத்துடன தெரிவிக்கவும்.

## ONLINE BANKING (NEFT)

**Dr. M.G.E. PUSHPARAJ**, **SALEM - 636 005. INDIA**

**STATE BANK OF INDIA** (SALEM-1970)
**A/C No: 10764116842** SWIFT CODE - SBININBB637- 10764116842
IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)
**A/C No: 1219101013622.** SWIFT CODE - CNRB0001219 -1219101013622.
IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



Mrs. & Mr. Nallathambi

சென்னை கிண்டியில் பிரபல **ஆடிட்டர்** Mr. **லிவிஸ்டன் நல்லதம்பி** அவர்களின் தகப்பனாரும் Dr. புஷ்பராஜ் ஆகிய எங்கள் குடும்ப நண்பருமான திரு. **நல்லதம்பி** அவர்கள் தனது 91வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். பட்டதாரியான இவர் கணக்கு சொல்லி கொடுப்பதில் வல்லவர் என்று பெயர் பெற்றவர். இவர் மனைவி திருமதி குளோரி நல்லதம்பி அவர்களும் பட்டதாரியும், நல்ல ஊழிய வாஞ்ஜை உள்ளவருமாகும். இவர் பூர்வீகம் CSI சபை அங்கமாக இருந்தாலும் ( LEF ) Laymen Evangelical Churchன் **ஸ்தாபகரும்** சகோ. ஜோ அவர்களின் தகப்பனாருமாகிய சகோ. **டேனியல்** அவர்கள் மூலமாக இரட்சிக்கப்பட்டு **ஆத்தும ஆதாயம்** செய்வதில் மிகவும் வல்லவரானார்.

தானே நிறைய துண்டு பிரதிகளை எழுதி தயாரித்து துண்டு பிரதி கொடுக்கும் ஊழியத்தில் சிறந்தவரானார். வாலிப பிள்ளைகளுக்கான பத்திரிகையில் தொடர்ந்து இவர் செய்தி எழுதி அனேகருக்கு பிரயோஜனமுள்ள பாத்திரமானார். ஆனால் தன் கணவர் **இரட்சிப்பின் அனுபவம் பெறாதவராக** இருப்பதால் இரவெல்லாம் கனவருக்காக அழுது ஜெபிப்பார். ஜாமக்காரன் பத்திரிகை மூலமாக **சகோ. நல்லதம்பி** அவர்கள் என்மேல் **தனி மரியாதையும், நம்பிக்கையும்** வைத்திருந்தார்.

ஆகவே அவர் மனைவி Mrs. **குளோரி நல்லதம்பி** அவர்கள் தன் கணவரிடம் **இரட்சிப்பை** குறித்து பேசும்படி என்னிடம் வேண்டிக்கொண்டார். இதற்கென்றே சிலமுறை நான் அவர்களை சந்தித்து வேத வசனங்களை வாசித்து காட்டி மனம் திரும்புதலை குறித்து சில மணி நேரம் பேசினேன். பேசுவதை நன்றாக கவணிப்பார். நான் செய்யும் மலை ஊழியம், கிராம ஊழியத்தையும் நான் மாதா மாதம் நிறைவேற்றுவதை அறிந்து ஆவலாக அந்த ஊழியங்களைப் பற்றி விசாரிப்பார். அப்போது அவர் சொந்த கிராமமான திருநெல்வேலி மாவட்டம் **கோவைகுளம்** என்ற கிராமத்தில் இவருக்கு நிறைய நெல் வயல்கள் உண்டு. அந்த **கிராம மக்கள்** மனம் திரும்பவும் இயேசுவை சொந்த இரட்சகரராக ஏற்றுக்கொள்ளவும் என்னை தன் கிராமத்துக்கு கூட்டம் நடத்த அழைத்தார்.

அந்த நாட்களில் இப்போது சேலம் ஸ்டீல்பிளாண்ட் ஆஸ்பத்திரியில் **டாக்டரும்** Joint Director ஆக ( MKMC ) பணியாற்றம் Dr. **Benita Samuel,** M.D.,அவர்களும் இப்போது அரசாங்க இன்ஜினிரிங் கல்லூரியின் **புரோபசராக** பணியாற்றும் Dr. **எட்னா வெஸ்லி** அவர்களும் மேலே நான் குறிப்பிட்ட பிரபல **ஆடிட்டர்** Mr. Livingston Nallathambi அவர்கள் யாவரும் +1, 10th 9th என்று படிக்கும் அந்த சிறு வயதில் நான் **கோவைகுளம்** சென்று கூட்டம் நடத்தினேன். இப்போது இந்த பிள்ளைகளும் படிப்பிலும் ஆவிக்குரிய ஜீவித்திலும் உயர்ந்து ஆண்டவருக்கு மகிமையாக வாழ்கிறார்கள்.

திடீரென்று ஒரு நாள் Mrs. குளோரி நல்லதம்பி அவர்கள் என்னை போனில் அழைத்து தன் கணவர் மனம் திரும்பி **இரட்சிக்கப்பட்டார்** என்பதை மிக மிக **சந்தோஷத்தோடு அறிவித்தார்.** நாங்கள் குடும்பமாய் ஆண்டவரை துதித்தோம். உடனே சகோ. நல்லதம்பி அவர்களை சந்திக்க ஆவல் கொண்டு சேலத்திலிருந்து – சென்னைக்கு ஒரே இரவில் பயணம் செய்து நேரில் சகோதரனை சந்தித்து **அவரோடு இணைந்து** அவர் அறைக்குசென்று கர்த்தரை துதித்து ஜெபித்தோம். அப்போது அவர் **என் மனைவி** நான் **இரவு உறங்கியவுடன்** என் கட்டலின் அருகே முழங்கால் படியிட்டு எனக்காக **மடி ஏந்தி பிட்சை கேட்பதைபோல** அழுது ஜெபிப்பதை திடீரென்று ஒருநாள் **கண்விழித்து கண்டேன்.** எனக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும் ஏற்பட்டது.

இந்த **இரட்சிப்பில்** என்னதான் இருக்கிறது ? எதற்கு இவள் **இரவு 2 மணிக்கு** இப்படி அழுது ஜெபிக்கிறாள் என்று குழப்பிப்போனேன். அன்றுதான் **அவள் அழுகை என்னை தொட்டது.** ஆனாலும் அதைக்காட்டிக்கொள்ளாமல் என்ன நீ பைத்தியமா ! இந்நேரத்தில் **பயித்திகாரி போல் அழுகிறாய்** பேசாமல் வந்து படு என்று அதட்டினேன். உடனே அவர் கீழ்படிந்து ஒன்றும் பேசாமல் படுத்துகொண்டாள். அவள் தூங்கிவிட்டார். ஆனால் **நானோ தூங்கவில்லை !** ஒரே குழப்பமாக இருந்தது.

நான் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. மறுநாள் முதல் வேத புத்தகத்தை முறையாக வாசிக்க தொடங்கினேன். என் மனைவி தன் வேத புத்தகத்தில் நிறைய ஊழியர்கள், ஊழிய ஸ்தாபனங்கள் நிறைய நபர்களுடைய பெயர்களை எல்லாம் அந்த ஜெப குறிப்பில் எழுதியிருந்தது. அதில் நல்லதம்பியாகிய **என் குடும்பத்தில்** உள்ள **சிலரின் பெயர்களையும்** எழுதி வைத்திருந்தார்.

ஆனால் அவர்கள் அத்தனைபேரும் **என் மனைவியை வெருப்பவர்கள். அவளை அற்பமாக நடத்துவார்கள். அவளை குறித்து** பொறாமையுடன் பேசுபவர்கள். ஆனால் அப்படிப்பட்ட அவர்களுக்காக இவளால் எப்படி இன்னும் ஜெபிக்க முடிகிறது, அவர்களையும் என் மனைவி வெறுக்கவில்லை. **இது என்னை யோசிக்க வைத்தது. இதுவும் என் மனம் மாற முக்கிய காரணமாகும்.**

☐ பல நன்மைகள் Mrs & Mr. Nallathambi அவர்கள் பிள்ளைகளால் இதை எழுதும் நாங்கள் பெற்றோம். அந்த **நன்றி உணர்வுடன்** இதை எழுதினேன். கடைசியாக சகோ. நல்லதம்பி அவர்கள் மரிக்கும் சில நாட்களுக்குமுன் ஒரு குறிப்பு எழுதி வைத்திருந்தார். அதை அவர் மகன் கண்டுபிடித்து அதில் **ஒவ்வொரு மாதமும்** எந்தெந்த ஊழியத்துக்கு **தன் பென்ஷன்** பணத்திருந்து எவ்வளவு ரூபாய்கள் **காணிக்கை அனுப்ப வேண்டும்** என்பதை ஒரு பேப்பரில் வரிசையாக மறக்காமல் இருக்க எழுதிவைத்திருந்தார். அந்த வரிசையில் **என் பெயரும்** இருப்பதாக மகன் Mr. லிவிங்ஸ்டன் அவர்கள் கூறி அவைகளை நிறைவேற்றவும் செய்தார். 2022ம் வருடம் வரை அந்த வரிசையில் உள்ள ஊழியர்களை தாங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

ஊழிய பாரம் உள்ள ஜெபிக்கும் விசுவாசிகளான Mrs & Mr. Nallathambi அவர்களின் வாழ்க்கைக்காக கர்த்தரை துதிக்கிறோம். கர்த்தர் தாமே அவர்களின் பிள்ளைகளுக்கு மருமகளுக்காக இரண்டு மருமகன்களுக்காக பேர பிள்ளைகளுக்காக கர்த்தர் தாமே அவர்களுக்கு ஆறுதலை தருவராக. குடும்பமாக ஜெபிக்கிறோம்.

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



**Rev. Dr.**
**SAM DEVANESAN**

**தமிழ் பாப்திஸ்து** சபையின் மூத்த போதகரும் சென்னை **கீழ்பாக்கம் தமிழ் பாப்திஸ்து சபையின்** தலைமை போதகர் மரித்த திரு. **தேவநேசம்.** போதகரின் மகனுமான பாஸ்டர் **சாம் தேசநேசன்** அவர்கள் கடந்த 15-10-2020 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் ஒரு நல்ல கண்வென்ஷன பிரசங்கியாரும் ஆவார். தமிழ் பாப்திஸ்து சபையிலேயே **கண்வென்ஷனில் பிரசங்கிக்கும் ஒரே போதகர் பாஸ்டர் சாம்** என்றால் மிகையாகாது. தமிழ்நாட்டில் நான் பிரசங்கித்த இரண்டு பெரிய கண்வென்ஷனிலும் இவரும் பிரசங்கம் நடத்தினார். நல்ல வேத ஞானம் உள்ளவர்.

## மிஷனரி ஊழியத்தை ஆதரித்த சபை

அதுமட்டுமல்ல தமிழ் பேப்திஸ்து சபையை மிஷனரிகளை தாங்கும் சபையாக மாற்றினார். உண்மையான மிஷனரி ஸ்தாபனம் எதுவானாலும் அவர்களுக்காக தன் சபையை திறந்து கொடுத்து அவர்களின் மிஷனரி பணியை தன் சபை மக்களுக்கு பகிர்ந்துகொள்ள செய்தார்.

இப்படியாக ஒவ்வொரு மாதமும் **பல மிஷனரி ஸ்தாபனங்களை** கிரமமாக **சபை மூலமாக காணிக்கை கொடுத்து** ஆதரித்து வந்தார்.

பேப்திஸ்து சபையின் அடிப்படை கொள்கையை தான் பிரசங்கிக்கும் பேசும் இடமெல்லாம் கூறாமல் இருக்கமாட்டார். **முன் குறிக்கப்பட்டவர்கள் என் ஆடுகள் என் சத்தத்தை கேட்கும்.** இன்னும் சில **பேப்திஸ்து சபைக்கான** அடிப்படை கொள்கையாக இருந்தது. ஆனால் பாஸ்டர் சாம் அவர்கள் பல வருடங்களுக்கு முன்பே **பேப்திஸ்து சபை** அடிப்படை கொள்கைகளிலிருந்து **குறிப்பாக சில குறிப்பிட்ட உபதேசத்திலிருந்து** வித்தியாசப் பட்டவராக காணப்பட்டார். அதன்பின் மிஷனரி ஊழியத்தின் அவசியத்தையும் இப்போது அதன் அவசர தேவையையும் உணர்ந்து மிஷனரி ஊழியங்களை தாங்கவும், சபை மக்களுக்கு அதன் அவசியத்தை கூறி சபை மக்களை ஊக்கப்படுத்தவும் தொடங்கினார்.

பாஸ்டர் Dr. சாம் தேவநேசன் அவர்களின் மரணம் பேப்திஸ்து சபை அனைத்து மக்களுக்கும் பெரிய இழப்பாகும்.

கர்த்தர் தாமே அவர் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சபை விசுவாசிகள் யாவருக்கும் ஆறுதலை தருவதாக.

***பாஸ்டர் Dr. தேவ நேசன் அவர்கள் மரிக்கும் சில மாதங்களுக்கு முன் எழுதியது.....***

☐ கர்த்தாவே ! **எது உம்மிடத்திலிருந்து என்னை பிரிக்கும்?.**

☐ **இந்த உலகத்திலிருந்து** என்னை பிரிக்கும் **மரணத்தையே** உம்மிடத்தில் என்னை சேர்க்கும் **கருவியாய் மாற்றிவிட்டீரே !**



**வரவேற்கிறோம் !** **வாழ்த்துகிறோம் !!**

## கேரள மார்தோமா சபைகளின் தலைமை பதவிக்கு புதிய பிஷப் தெரிந்தெடுக்கப்பட்டார்.

மலையாள பாஷை பேசும் கேரளா மக்களுக்கு மட்டும் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சபைதான் மார்தோமா சபை. இது மலையாள CSI சபை மக்களோடு மட்டும் இணைப்பு வைத்துள்ளது.

மார்தேமா சபை வழக்கத்தின்படி **தாடி** வளர்க்காதவரை பிஷப்பாக தெரிந்தெடுக்க மாட்டார்கள். அந்த சம்பிரதாயத்தை உடைத்து தாடியில்லா ஒருவர் பிஷப்பாக அதுவும் தலைமை பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். இவர் பெயர் Most Rev. **கீவர்கிஸ் மார்தியோடேஷியஸ் ஸப்ரகன் மெத்ரோபோலித்தா** என்பதாகும். இவர் நவீன உபதேச கொள்கை உடையவர் பெண்கள் ஆயராகலாம். அரவானிகளாக இருப்பவர்கள், வாலிபர்களுக்கு திருமண்டலத்தில் பதவிகள் கொடுக்கப்படவேண்டும். இப்படிப்பட்ட கொள்கை உள்ளவரிடம் ஆவிக்குரிய அனுபவத்தை எதரிப்பார்க்க முடியாது என்றாலும் ஒரு புதிய தலைவரை (மாடரேட்டரை) வரவேற்பு கொடுக்க வேண்டியது நமது நாகரீகம். வரவேற்போம் ! ஜெபிப்போம் !!

– ஜாமக்காரன்

**OCTOBER-2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.